பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 08 புதன்கிழமை (24-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:241

சர்வதேச நாணயநிதியத்தின் தலைவர் ஹொஸ்ட் கொஹ்லரைச் சந்தித்து கைலாகு கொடுக்கிறார் ரணில்.



# அமைச்சர்கள் மீது ஜனாதிபதி வக்கணம் கூறி விளாசல்!

## சுதந்திரக்கட்சியின் பொலன்னறுவை மாவட்டக் கருத்தரங்கில்

அமைச்சர்கள் சிலரைப் பெயர் குறிப்பிட்டு அவர்கள்மீது வக்கணம் கூறி விளாசித் தள்ளினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இது நடந்தது கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலன்னறுவையில். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொலன்னறுவை மாவட்டக் கருத்தரங்கில்.

ஜனாதிபதி கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது:-

தற்போது மனிதாபிமானத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டியுள்ளது. இது மிகவும் கடினமான விடயம்தான், ஏனென்றால் எமது பெற்றோர்கள் எமக்கு மனிதாபிமானத்தை ஊட்டியுள்ளார்கள்.

துப்பாக்கியால் சுட்ட நபரையே மன்னிக்குமாறு மரணப்படுக்கையில் வைத்துத் தெரிவித்த தந்தை ஒருவரின் மகள் நான். ஆனாலும் தற்போது

(13 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கு சமூக, பொருளாதார, கலாசார விடயங்களிலேயேதான் அதிகாரப் பகிர்வு

## அமெரிக்காவில் பிரதமர் ரணில் அறிவிப்பு புலிகளையும் கடுமையாகச் சாடுகின்றார்

வாஷிங்டன்,ஜூலை24

**ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படையிலேயே பேச்சு நடத்த இருக்கிறோம். தமிழ் மக்களோடு அவர்களின் பிராந்தியத்தில் சமூக, பொருளாதார, கலாசார விடயங்களில் அதிகாரத்தைப் பரவலாக்க உள்ளோம். எப்படியிருந்தாலும் எல்லாப் பிராந்தியங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.**

**- இப்படி அமெரிக்காவில் வைத்துத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

அமெரிக்காவுக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குவைத்து 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அப்போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அப்பேட்டியில் புலிகளை அவர் காட்டமாக விமர்சிக்கவும் தவறவில்லை. அதில் அவர் கூறியிருப்பதாவது:-

இருபது வருடப் போராட்டத்தில் 80 ஆயிரம் மக்களைக் கொன்று குவித்தவர்கள் புலிகள்.

அவர்கள் சமாதானம் பேச வந்தார்கள் என்றால் அதற்குக் காரணம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புஷ் - ரணில் இன்று சந்திப்பு



வாஷிங்டன்,ஜூலை24

அமெரிக்க விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை இன்று சந்தித்துப் பேசுவார்.



இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் பற்றியும் பிரதமர் ரணில் அமெரிக்க அதிபருக்கு சுருக்கமாக விளக்கமளிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்கா - இலங்கை வர்த்தக உதவிகளை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் உரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதையடுத்து, அமெரிக்கத் தேசிய ஊடகக் கழகத்தில் தெரிவு செய்யப்பட்ட செய்தியாளர்கள் மத்தியில் பிரதமர் ரணில் பேசுவார். இலங்கையில் ஊடகச் சுதந்திரம் மற்றும் அதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளவுள்ள எதிர்காலத் திட்டங்கள் என்பவை பற்றியும் பிரதமர் செய்தியாளர்களுக்கு விளக்கமளிப்பார்.

செனட்சபை உறுப்பினரும் அமெரிக்காவின் (14ஆம் பக்கம் பார்க்க)

# பற்றைக் காணிக்குள்ளிருந்து உருக்குலைந்த சடலம் மீட்பு!

## பெரியவிளான் செம்பாடு பகுதியில்

யாழ்ப்பாணம்,ஜூலை24

பெரியவிளான்,செம்பாடு பகுதியில் பற்றைக் காணிக்குள் இருந்து உருக்குலைந்து எலும்புக்கூடான மனித சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டிருக்கிறது.

இப்பகுதியில், காணிகளில் பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்துகொண்டிருந்த சிலர் சடலத்தைக் கண்டனர். அவர்கள் இளவாலை பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

ஆணா, பெண்ணா என்பது தெரியாத நிலையில் சடலம் காணப்பட்டது. ஆடைகள் எவையும் சடலத்துடன் காணப்படவில்லை. பிரஸ்தாப நபர் உயிரிழந்து நீண்டகாலம் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சடலம் கிடந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவில் ஒருசோடி புதிய காலணிகள் காணப்பட்டன.

மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்றுப்பிற்பகல் சடலத்தைச் சென்று பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.

சடலம் நேற்றுமாலை பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-10)

# கறுப்பு ஜூலை தினம் அமைதியாகக் கழிந்தது!

யாழ்ப்பாணம்,ஜூலை24

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் முக்கியமான ஒரு நாளான கறுப்பு ஜூலை தினம் நேற்று வடக்கு - கிழக்கு பகுதிகளில் நினைவுகூரப்பட்டது. 19 ஆவது வருட கறுப்பு ஜூலை தினம் குடாநாடு உட்பட வடக்கு - கிழக்கில நேற்று அமைதியாகக் கழிந்தது.

கறுப்பு ஜூலையை ஒட்டி தமிழ்ப் பிரதேசங்களில் நேற்றுமுதல் 27 ஆம் திகதிவரை களியாட்ட நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கறுப்பு ஜூலை தொடர்பான பதாகைகளும், சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு நகரின் பல இடங்களில் கறுப்புத் துணியினாலான பதாகைகள் காணப்பட்டன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் புகைப்படத்துடன் கூடிய சுவரொட்டிகளை அக்கட்சியினர் மட்டக்களப்பு உட்பட பல இடங்களிலும் ஒட்டியுள்ளனர். குடாநாட்டிலும் அந்தச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கான திகதியை நிர்ணயிப்பது அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது

## தமிழ்ச்செல்வன் பேட்டி

பேச்சுக்கான கால எல்லையைக் குறிக்கும் விடயம் புலிகளின் கைகளில் இல்லை. அதற்கு முன்னர் செய்யப்பட வேண்டிய பெரும்பாலான பணிகள் அரசின் கைகளில்தான் உள்ளன.

இப்படிக் கூறியிருக்கின்றார் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் - பிரதமர் ரணில் சந்திப்புக்கு முதல் தினமான நேற்று கிளிநொச்சியில் வைத்து ரோய்ட்டருக்கு வழங்கிய பேட்டியிலேயே தமிழ்ச்செல்வன் இப்படிக் கூறியிருக்கின்றார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

ஒப்பந்தம் கைச்சாத்தாகி 160 நாள் கால வரம்பில் அனைத்தும் - நூறு வீதமும் - ஒரேயடியாக நிறைவேற்றப்பட்டிருக்கத்தான் வேண்டும் என வற்புறுத்தும் நிலையை நாம் கூறவில்லை.

இரண்டு தரப்பும் இதுவரை யுத்த நிறுத்தத்தை செவ்வனே பேணி வருவது எமக்கு மகிழ்ச்சியே. ஆனாலும் ஆரம்பத்தில் காணப்பட்ட ஈடுபாடும் உற்சாகமும் இப்போது குன்றி வருவது துரதிஷ்டமே.

கடந்த இரண்டு தசாப்தங்களாகப் போரை எதிர்கொண்ட தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள் கௌரவமான - மேன்மைக்குரிய - வழியில் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு - என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ)

### முச்சந்தி முரளி



... அங்க போனவுடனே சுருதியை மாற்றுகிறார்...

## அமெரிக்க ராணுவம் பயிற்சி

வாஷிங்டன்,ஜூலை24

1984 இற்குப் பிறகு அமெரிக்க ஜனாதிபதி ஒருவரைச் சந்திக்கும் முதலாவது இலங்கைத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான்.

அவர் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை மட்டுமன்றி ராஜாங்க அமைச்சர் கொலின் பவல், தேசியப் பாதுகாப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுமுகம் தொண்டமானை கைதுசெய்ய நீதிமன்று ஆணை!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நுவரெலியா பொலீஸாருக்கு நுவரெலியா மாஜிஸ்திரேட் பிரபாத் சில்வா உத்தரவிட்டிருக்கிறார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தேர்தல் வன்முறைகள் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் நுவரெலியா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது அந்த வழக்கில் ஆஜராகத் தவறியதற்காகவே ஆறுமுகம் தொண்டமானுக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நதிமன்றத்தில் ஆஜரான நுவரெலியா மாநகரசபையின் முன்னாள் பிரதிமேயர் சிவராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எல்.ஜெகதீசன் உட்பட நான்கு பேரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வெளிநாடு சென்றிருந்ததாலேயே நீதிமன்றத்தில் அத்தினத்தில் ஆஜராகியிருக்க முடியவில்லை என அவரது அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில்

# இலங்கைக்கு இன்னிங்ஸ் வெற்றி

## அரவிந்த இரட்டைச் சதம்; ஜயசூரிய 10 ஆவது சதம்

கொழும்பு,ஜூலை24

பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி ஒரு இன்னிங்ஸ மற்றும் 196 ஓட்டங்களால் வென்றது. இலங்கை அணி பெற்ற மிகப்பெரிய டெஸ்ட் வெற்றி இதுவாகும்.

பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பங்களாதேஷ அணி முதல் இன்னிங்ஸில் 161 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 541 ஓட்டங்களைப் பெற்று துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது.



சிறப்பு ஆட்டக்காரராக முரளி.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்பதற்கு 380 ஓட்டங்கள் தேவையான நிலையில் நேற்றுக்காலை தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி. ஆனால் 66.3 ஓவர்களில் 184 ஓட்டங்களை மட்டுமே அவ்வணி பெற்றது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அல் சஹாரியர் 67 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணி பந்து வீச்சாளர்களில் முத்தையா முரளிதரன் 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முரளிதரன் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான விக்கெட்டுகளை வீழ்த்துவது இது 36 ஆவது தடவையாகும். இதன் மூலம் நியூஸிலாந்து வீரர் ரிச்சர்ட் ஹட்லியின் உலக சாதனையைச் சமப்படுத்தியுள்ளார் முரளி. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் அவர் தெரிவானார்.

### இலங்கை அணியின் சாதனை

இப்போட்டியின் இரண்டாவது நாளான திங்களன்று இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 541 ஓட்டங்களைப் பெற்றது. அன்றைய ஆட்டத்தில் இலங்கை 509 ஓட்டங்கைளப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு உலக சாதனையாகும். டெஸ்ட் போட்டியொன்றில் ஒருநாளில் ஒரு அணி பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்கள் இவை.

1924 ஆம் ஆண்டில் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக 503 ஓட்டங்களைப் பெற்றமையே முந்தைய சாதனையாகும்.

ஜயசூரியவும் அரவிந்தவும் 5 ஆவது விக்கெட்டுக்காக 234 ஓட்டங்களைப் பெற்று புதிய இலங்கை சாதனையொன்றைப் படைத்தனர்.

அரவிந்த 234 பந்துவீச்சுகளில் ஒரு சிக்ஸர், 28 பவுண்டரிகள் உட்பட 206 ஓட்டங்களைப் பெற்றார். அவர் டெஸ்ட் போட்டியில் பெற்ற 20 சதமும் இரண்டாவது இரட்டைச் சதமும் ஆகும்.

சனத் ஜயசூரிய 164 பந்து வீச்சுகளில் 6 சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் உட்பட 145 ஓட்டங்களைப் பெற்றார். ஜயசூரிய டெஸ்ட் போட்டிகளில் பெற்ற 10 ஆவது சதம் இதுவாகும்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர்களில் இனாமுல் ஹக் 144 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இளம் வீரர்களான மஞ்சளுருள் இஸ்லாம், தெல்ஹாஜுபைர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

### தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு!

யாழ்ப்பாணம்,ஜூலை24

அண்மையில் திருகோணமலையில நடந்துமுடிந்த மாகாண மெய்வன்மைப போட்டிகளில் கலந்துகொண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் பலர் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

19 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் மற்றும் 1,500 மீற்றர் தூர ஓட்டப் போட்டிகளில் இந்தப் பாடசாலை மாணவரான யோகநாதன் துஷ்கரன் முதலாம் இடங்களையும், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் குணரட்னம் கபிலன் இரண்டாம் இடத்தையும், 4x400 அஞ்சலோட்டக் குழுவினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்கள் அனைவரும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# அணித் தெரிவு ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, குடாநாட்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்களை கொண்ட - 17 வயதுக்குட்பட்ட - அணி ஒன்றை இனங்காணும் வகையில் நடத்தி வரும் கிரிக்கெட் வீரர் தெரிவு ஆட்டங்கள் இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக கல்லூரியிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரியும் -

புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து யாழ்.பரியோவான் கல்லூரியும் மோதுகின்றன.

முன்னதாக நேற்று யாழ்.மத்திய கல்லூரிக்கும், புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையே யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 118 ஓட்டங்களாலும் 4 விக்கெட்டுக்களாலும் வெற்றிபெற்றது.

யாழ்.பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 10 ஓட்டங்களாலும் 2 விக்கெட்டுக்களாலும் வெற்றிபெற்றது.

(ஐ-9)

### கொழும்பு பாடசாலை கிரிக்கெட் அணி யாழ்.வருகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை24

கொழும்பு தேர்ஸ்டன் வித்தியாலய கிரிக்கெட் அணி விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது. அடுத்தமாதம் 10ஆம் திகதி இந்த அணியினர் யாழ்.வரவிருக்கின்றனர்.

எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் இந்த அணியினர் சென்ஜோன்ஸ கல்லூரி கிரிக்கெட் அணியினருடனான போட்டிகளில் கலந்துகொள்ள உள்ளனர். (ம)




# ஐ.சி.சி. சம்பியன் கிண்ணம் அறிமுகம்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஷிப் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான வெற்றிக்கிண்ணத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கொழும்பு 'தாஜ் சமுத்திரா' ஹோட்டலில் இவ்வைபவம் நடைபெற்றது. சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் வெற்றிக்கிண்ணத்தை இலங்கை கிரிக்கெட் சபையிடம் கையளித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஹேமக அமரசூரிய, பிரதம நிறைவேற்று அதிகாரி அனுர தென்னக்கோன், இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜயசூரிய, முன்னாள் அணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க உட்பட பெருந்தொகையானோர் இவ்வைபவத்தில் பங்குபற்றினர்.

ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில் -

இலங்கையில் நடைபெறவுள்ள இச்சுற்றுப்போட்டியின்போது பல விடயங்கள் முதற்றடவையாக இடம்பெறவுள்ளன.

டெஸ்ட் அந்தஸ்துள்ள நாடொன்றில் முதற்றடவையாக இச்சுற்றுப் போட்டி நடைபெறுகின்றது.

புதிய ஒழுங்கின்படி போட்டிகள் நடைபெறவுள்ளமை, ஐ.சி.சியின் சிறந்த நடுவர் குழாம், போட்டி மத்தியஸ்தர்கள் முதற்றடவையாக ஒன்றுபட்டு செயற்படவுள்ளமை, நடுவர்கள் பரீட்சார்த்தமாக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தவுள்ளமை ஆகியன இச்சுற்றுப்போட்டியின குறிப்பிடத்தக்க விடயங்களாக உள்ளன - என்று கூறினார்.

"1998 இல் வங்களாதேஷிலும் 2000 ஆம் ஆண்டில் கென்யாவிலும் இச்சுற்றுப்போட்டிகள் நடத்தப்பட்டன. முறையே தென்னாபிரிக்காவும் நியூஸிலாந்தும் இப்போட்டிகளில் சம்பியனாகின. அப்போட்டிகளில் ஆரம்பச்சுற்று நொக் அவுட் அடிப்படையிலேயே நடைபெற்றது.

"இதனால் முன்னணிய போட்டிகளில் முன்னணி அணிகள் ஆரம்பத்திலேயே வெளியேற நேர்ந்தது.

"இம்முறை பன்னிரண்டு அணிகளும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் ஆரம்பச்சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

"ஒவ்வொரு குழுவிலும் முதலிடம் பெறும் அணி அரையிறுதிக்குத் தெரிவாகும் எனவும்" மல்கம் ஸ்பீட் கூறினார்.

நடுவர்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து மல்கம் ஸ்பீட் கருத்துத் தெரிவிக்கையில-

"இவ்விடயத்தில் முன்னாள் அணித் தலைவர்களான அலன்ட் போர்டர், சுனில் கவாஸ்கர் முதலானோரும் பிளவுபட்டுள்ளனர்.

"நவீன தொழில்நுட்பப் பாவனை, கிரிக்கெட்டின் கட்டமைப்புக்கு பாதகத்தை ஏற்படுத்துமென அலன்ட் போர்டர் கூறுகிறார். இதேவேளை, அதிகளவு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவேண்டுமென கவாஸ்கர் வலியுறுத்துகிறார்.

"கிரிக்கெட் உலகின் மாபெரும் வீரர்களே இதுதொடர்பாக பிளவுபட்டுள்ள நிலையில் இவ்விடயத்தில் ஐ.சி.சி. திறந்த மனதுடன் நடந்து கொள்கிறது.

"நாம் நடுவர்களை 'ரோபோ'க்களாக மாற்ற விரும்பவில்லை. ஆனால், தீர்ப்புகளை மேற்கொள்வதற்கு உதவியாக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த அனுமதிக்கிறோம். அனைவரும் மிகச் சரியான தீர்ப்புகளையே எதிர்பார்க்கின்றனர்.

"நவீன தொழில்நுட்பப் பாவனை பயனளித்தால் அதை ஏனைய போட்டிகளிலும் பயன்படுத்துவோம். பாதகமாக அமைந்தால் நிறுத்திவிடுவோம்"

- இவ்வாறு கூறினார் ஸ்பீட். (ஐ)

# பாடசாலைகள் கால்பந்தாட்டம் இறுதிச்சுற்று ஜூலை 26 இல்

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 14 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 26 முதல் 28ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.



காத்திருக்கும் விருதுகள்

"கடந்த வருடம் 13வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் இச்சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் முதலாவது சுற்றுப்போட்டி இது.

"தவிர்க்கமுடியாத காரணங்களால இத்தொடரின் இறுதிச் சுற்று ஜூலை இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. தற்போது மேற்படி மாணவர்கள் 14 வயதானவர்களாக உள்ளனர். இதனால் இச்சுற்றுப்போட்டி தற்போது 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியாகவே நடைபெறுகிறது"

- இவ்வாறு இலங்கைக் கால்பந்தாட்ச் சம்மேளனத்தின் உபதலைவர் ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா கூறினார்.

இப்போட்டிகள் தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்று இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றுகையிலேயே ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"ஆரம்ப சுற்றில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்., மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்றின. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 2 அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டன. யாழ்.மாவட்டம் மாத்திரம் 5 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திலிருந்தும் தலா 2 அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

வவுனியா வலயத்திலிருந்து போட்டி முடிவுகள் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே வவுனியா மாவட்டப் பாடசாலைகள் இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்படவில்லை.

• யாழ். மாவட்டத்தின் தென்மராட்சி, தீவக வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் பாதணிகளின்மை, அடையாள அட்டை கிடைக்காமை போன்ற காரணங்களால் இறுதிச் சுற்றில் பங்குபற்றவில்லை. எனவே இறுதிச் சுற்றில் 16 பாடசாலைகள் மாத்திரமே பங்குபற்றுகின்றன.

### விசேட விருதுகள்

இச்சுற்றுப்போட்டியில் முதலிரு இடங்களைப் பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் கால்பந்தாட்ட உபகரணப் பைகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் சுற்றுப்போட்டியின் சிறப்பாட்டக்காரர், சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர் ஆகிய மூன்று விசேட விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மேலும் இறுதிச் சுற்றில் பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கு கால்பந்துகளும் வழங்கப்படும் யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு போக்குவரத்துச் செலவுக்காக தலா 25,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

- இவ்வாறு ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா கூறினார்.

இறுதிச் சுற்றின் அங்குரார்ப்பண வைபவம் ஜூலை 26ஆம் திகதி காலை 9 மணிக்கு சென்.ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ரி.வைத்திலிங்கம் பிரதம அதிதியாகவும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.ஜே.எவ்.ரூபசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.


அரையிறுதிப் போட்டிகள், இறுதிப் போட்டி ஆகியன ஜூலை 28ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இறுதிப்போட்டியில் இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா பிரதம அதிதியாகப் பங்குபற்றுவுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் சிறப்பதிதியாகக் கலந்துகொள்வார்.

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கனிஷ்ட பிரிவு இயக்குநர் டி.வை.ஏ.மஹிந்தபால, உப இயக்குநர் ரி.எவ்.சமத், யாழ். மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் பிரான்ஸிஸ் ஆகியோரும் இச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.

(ஐ)

# ஆஸ்பத்திரி நடத்துகிறார் ரொனால்டோ



பிரேஸில் கால்பந்து அணியின் முன்னணி வீரரான ரொனால்டோ தனது சொந்த ஊரான ரியோடி ஜெனிரோ நகரில் ஒரு வைத்தியசாலையைத் திறந்துள்ளார்.

உலகக் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டியில் பிரேஸில் அணி ஜேர்மனியை வென்று சாதனை படைக்கக் காரணமாக இருந்தவர் ரொனால்டோ.

ரொனால்டோ காலில் காயமடைந்து சிகிச்சை பெற்றபோது அவருக்கு டாக்டர் குழு ஒன்று சிகிச்சை அளித்தது. இந்த டாக்டர்களுடன் சேர்ந்து ரொனால்டோ இந்தப் புதிய வைத்தியசாலையை ஆரம்பித்திருக்கிறார். இது ஒரு பிசியோதெரபி (முடக்கு நீக்கு இயல்துறை) நிலையமாகும். தனது வைத்தியசாலைக்கு "ஆர்-9" என்று ரொனால்டோ பெயர் சூட்டி இருக்கிறார். ஆர் - என்பது ரொனால்டோ என்ற பெயரின் ஆரம்ப எழுத்தாகும். "9" என்பது பிரேஸில் கால்பந்து அணியில் அவரது அங்கி 'எண்' ஆகும்.

பிரேஸில் நாட்டில் உள்ள எஸ் டாசியா டி சா பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்தப் பிசியோதெரபி வைத்தியசாலை நடத்துகிறார்கள். இந்த வைத்தியசாலையில் பிசியோ தெரபி பற்றி பட்டப்படிப்பும் கற்பிக்கப்படுகிறது.

"ஆர்-9" பிசியோதெரபி நிலையத்தில் ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும் என்று ரொனால்டோ கூறியிருக்கிறார். இந்த வைத்தியசாலை தொடங்க அவர் சுமார் 28கோடி ரூபா வரை முதலீடு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது. - (ம)

# எங்கும் பிள்ளையார்





ஹொலிவூட் நடிகை ஜூலியா ரொபர்ட்சன் அண்மையில் திருமணம் செய்துகொண்டார். (சிம்ரன் திருமணம் என்றால் பரவாயில்லை. இவள் திருமணம் எல்லாம் எமக்கு எதற்கு என்று நினைக்கிறீர்களா? பரவாயில்லை நினைத்துக் கொள்ளுங்கள்). அவரது திருமணம் அல்ல அங்கு நடந்த நிகழ்வு ஒன்றுதான் நமக்குத் தேவையானது.

தனது திருமணத்துக்கு வந்திருந்த அனைவருக்கும் அவர் கேக் வழங்கினார். (இது வழமையானது தானே....?) விசேஷம் என்னவென்றால் அவர் வழங்கிய கேக் இந்துக் கடவுளான பிள்ளையார் வடிவில் இருந்தது.

இந்தக் கேக் விருந்துக்கு வந்தவர்களின் பெரும் பாராட்டுப் பெற்றது -

ஜூலியா ரொபர்ட்ஸ் கடந்த ஆண்டுக்கான சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதிலுமா சாதனை



மேற்குலகத்தினருக்கு இயல்பாகவே விசித்திரமாக நடப்பது பிடித்தமான ஒரு பொழுதுபோக்கு. சில வேளைகளில் இது கட்டுமீறிப் போவதும் உண்டு.

இப்படி வித்தியாசமாக - விவகாரமாக - எதனையாவது செய்து புகழ்பெற வேண்டும் என்று விரும்பிய பிரிட்டனைச் சேர்ந்த மார்க் ரொபர்ட்ஸ் அதில் ஒரு சாதனையே நிகழ்த்திவிட்டார்.

அந்தச் சாதனை என்ன என்கிறீர்களா? வேறொன்றும் இல்லை! போட்டிகள் நடைபெறும்போது மைதானத்துக்குக் குறுக்கே நிர்வாணமாக ஓடியதுதான் அந்தச் சாதனை.

இதிலென்ன சாதனை என்று நீங்கள் நினைப்பது தெரிகிறது. ஆசாமி ஒரு தடவை இரு தடவைகள் இல்லை 150 முறை இப்படி ஓடிச் சாதனை புரிந்துள்ளார்.



கடைசியாக அவர் இப்படி ஓடியது அண்மையில் நடந்துமுடிந்த விம்பிள்டன் டெனிஸ் ஆண்கள் இறுதிப் போட்டியில் தான். பொலீஸார் அவரை உடனடியாக கைதுசெய்தனர். இவரைப் பற்றிய இன்னுமொரு சுவாரஸ்யமான தகவல்; 37 வயதான இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர்.

வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்றால் இப்படியுமா சாதிப்பது? அடடா கலிகாலம்.....

# கடிகாரத்துக்குள் படம்



கேம்பிரிட்ஜ் காட்சி அமைப்பு தொழில்நுட்ப நிறுவனம் (Cambridge display technology) புதிய கைக்கடிகாரம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்தக் கைக்கடிகாரத்தில் நீங்கள் படங்களைப் (Photograph) பார்க்கலாம். பொலிமர் என்ற ஒரு வகை இரசாயனப் பொருளால் இது ஆக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சித் திரையில் பார்ப்பது போன்று, இந்தக் கைக் கடிகாரத்தில் பதியப்பட்டுள்ள படங்களைப் பார்வையிடலாம்.

கடிகாரத்தினுள் செலுத்திய பின்னர் குறிப்பிட்ட அளவு படங்களை இந்தக் தேவைப்படும்போது அவற்றைப் பார்க்கலாம்.

# வித்தியாசமான போட்டி

கோனே என்ற தீவில் ஆண்டுதோறும் ஒரு வித்தியாசமான போட்டி நடைபெறுகிறது. குறைந்த நேரத்தில் அதிக மாமிச ரொட்டிகளைச் சாப்பிடுவது என்பதுதான் அந்தப் போட்டியாகும்.



இந்த ஆண்டும் போட்டி கோலாகலமாக நடைபெற்றது. ஜப்பானியரான டேக்கு கோபயாசி என்பவர் 12 நிமிடங்களில் மிக அதிகளவு ரொட்டிகளை உண்டு சாதனைபடைத்தார்.

சென்ற ஆண்டும் இதே ஆசாமி 12 நிமிடங்களில் 50 மாமிச ரொட்டிகளை உண்டு சாதனை புரிந்தார். இந்த வருடம் அதனை முறியடித்துவிட்டார்.

(படத்தில் நடுவில் இருப்பவர்)

இந்தப் போட்டியில் 26 மாமிச ரொட்டிகளைத் தின்று நியூயோர்க்வாசியான எரிக் புக்கர் இரண்டாம் இடத்தையும், 25 ரொட்டிகளை உண்டு புரூக்ளினைச் சேர்ந்த ஓலெக் என்பவர் மூன்றாவது இடத்தையும் பெற்றனர். 1916ஆம் ஆண்டு முதல் இந்தப் போட்டி தொடர்ந்து நடைபெறுகிறது.

(ஆண்டவா இதிலுமா ஜப்பானியர்கள் அரக்கர்கள்)

தயாரிப்பு: கனிமொழி

# அட! அப்படியா!!

# குட்டிக் கார்



புதிது புதிதாக எதையாவது உருவாக்குவதில் ஜப்பானியர்கள் வல்லவர்கள். அதைவிட குட்டி குட்டியாக ஒவ்வொன்றையும் உருவாக்குவதில் அவர்கள் சூரர்கள். இப்போதும் ஒரு குட்டிக் காரை அவர்கள் தயாரித்துள்ளனர்.

விளையாட்டுப் பொருள்களை உருவாக்கும் புகழ்பெற்ற ஜப்பானிய நிறுவனமான 'தகாரா' இந்தப் புதிய காரைத் தயாரித்துள்ளது. ஒருவர் மட்டுமே பயணஞ் செய்யக்கூடிய இந்தக் குட்டிக்காரில் அதிகபட்சமாக 50 கிலோமீற்றர் வேகத்தில் செல்லலாம்.

சாதாரணமாக மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் செல்லலாம். பார்ப்பதற்கு பொம்மைக்கார் போன்று இருக்கும் இது பற்றரியிலேயே இயங்குகின்றது. ஒரு பற்றரியில் தொடர்ச்சியாக 80 கிலோமீற்றர் தூரத்திற்கு ஓடமுடியும். பின்னர் பற்றரியை மீண்டும் சார்ஜ் செய்துகொள்ள வேண்டும்.

ஜப்பானில் இந்தக் கார்களின் அறிமுக விழா அண்மையில் இடம்பெற்றது. வெள்ளை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் மட்டுமே இது முதலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லாமே இப்படி குட்டி குட்டியாகப் போய்க்கொண்டிருந்தால் பெரிசுகளுக்கு என்ன மதிப்பு?

# குளோனிங் மனிதன்



"ஜேர்மனியில் உள்ள நாஜி ஆதரவாளர்கள், மறைந்த சர்வாதிகாரி ஹிட்லரின் உடற்பாகங்களில் இருந்து பெறப்பட்ட திசுக்களைக்(Tissue) கொண்டு குளோனிங் முறையில் பல புதிய ஹிட்லர் குழந்தைகளைப் பெறுவித்துள்ளனர். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகள் இவ்வாறு பெறப்பட்டிருக்கலாம். இந்தக் குழந்தைகளைத் தேடும் பணியை சா வதேசப் பொலீஸார் முடுக்கிவிட்டுள்ளனர்."

என்ன, இதனை வாசிக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறதா. இது வெறும் கற்பனைதான் ஆனால், இன்னும் இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் இத்தகைய ஒரு நிலை தோன்றிவிட முடியாது என்று சொல்லிவிட முடியாது.

குளோனிங் எனப்படும் படியாக்க முறைமூலம் முதன்முதலில் 'டொலி' என்ற ஆடு உருவாக்கப்பட்டபோது இந்த உலகம் மகிழ்ந்தது. ஆச்சரியத்தில் ஆழ்ந்துபோனது. சிலர் மட்டும் இதனை இயற்கைக்கு விரோதமானது என்றார்கள். ஆனால், அதனை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை.

டொலியைத் தொடர்ந்து பல நாடுகளிலும் குளோனிங் ஆராய்ச்சிகள் பெருக ஆரம்பித்தன. எலி, ஆடு, மாடு, பன்றி போன்ற விலங்குகள் இந்த குளோனிங் முறைமூலம் உருவாக்கப்பட்டன.

இது ஒருபுறம் இருக்க மனிதனை குளோனிங்மூலம் உருவாக்கும் முயற்சிகளும் ஆரம்பமாகின. பல நாடுகள் இதற்குத் தடைவிதித்தன. இந்த விடயம் உலகெங்கும் பெரும் சர்ச்சையைக் கிளப்பின.

தடை விதிக்கப்படாத நாடுகளில் சில விஞ்ஞானிகள் இரகசியமாக இந்த ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர். இது குறித்த தகவல்கள் அண்மையில் வெளியாகின.

குளோனிங் தொடர்பான சர்வதேசக் கண்காட்சி ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

குளோனாய்டு என்ற நிறுவனம் இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்து நடத்தியது. உயிர் தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சி சர்வதேச அளவில் நடப்பது இதுவே முதற்றடவையாகும். இந்தக் கண்காட்சியில் புதிய குளோனிங் முறை ஒன்றையும் வெளியிட்டது. எம்பிரியோனிக் செல்பிஷன் சிஸ்ரம் ( ) என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

புதிய முறைமூலம் குளோனிங் எளிதாகவும் விரைவாகவும் நடைபெறுகின்றது. வழக்கமான குளோனிங் முறையில் உள்ள குளறுபடிகளும் கோளாறுகளும் இதில் இடம்பெறுவதில்லை எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இதனையெல்லாம் விட முக்கியமானதும் சுவாரஸ்யமானதுமான விடயம் இதுதான்!

முதலாவது குளோனிங் மனிதன் (குழந்தை) எதிர்வரும் டிசெம்பர் மாதம் இந்த உலகத்தைப் பார்க்கும். பிரான்ஸ பத்திரிகையான லிபரேஷன் (Liberation) இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. "முதலாவது குளோனிங் மனிதன் டிசெம்பர் மாதத்தில் ஒரு நாளில் உலகின் வெளிச்சத்தைப் பார்ப்பான்" (The first Cloned human will see the light of the day in December) - இவ்வாறுதான் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய டாக்டரான சேர்விணோ அன்ரிநோறியை (Servrerino antinori) மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்திதான் ஆரம்பத்தில கூறப்பட்ட கற்பனைக்குக் காரணம்.

அன்ரிநோறியின் சர்ச்சைக்குரிய இந்தத் திட்டம் குறித்த பல வாதப் பிரதிவாதங்கள் கிளப்பியுள்ளன.

இந்த உலகில் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட அல்லது போதிய உயிரணுக்கள் இல்லாததால் பாதிக்கப்பட்டுக் குழந்தைகள் இல்லாமல் - வாரிசு இல்லாமல் - 12 கோடிப் பேர் துன்பப்படுகிறார்கள்.

குளோனிங் முறைமூலம் அவர்களது துன்பங்கள், கவலைகள் நீங்கும் என்கிறார் அன்ரிநோறி.

இவ்வாறு குழந்தைகள் இல்லாத தம்பதியினருக்கு உதவுவதே தனது இந்தக் குளோனிங் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் கூறுகின்றார்.

இவரது இந்த ஆராய்ச்சிக்கு 50 தம்பதியர்கள் உதவுவதற்கு முன்வந்துள்ளனர். இவர்களில் 18 பேருக்கு குளோனிங்மூலம் உருவாக்கப்பட்ட கரு வயிற்றில் செலுத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் தற்போது கர்ப்பமாக இருக்கின்றார். "குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட 18 முளையங்களை (Embryos) நான் கர்ப்பப்பையினுள் வைத்தேன். அவ்வாறு கரு முளையம் வைக்கப்பட்டவர்களில் ஒருவர் கர்ப்பவதியாகியுள்ளார்." என்றார் அன்ரிநோறி. (முளையம் என்பது கரு முட்டை, உயிரணுவுடன் சேர்ந்து கருக்கட்டலுக்கு உட்பட்ட ஒரு நிலை)


பிரேம்.

குறிப்பிட்ட அந்தக் கரு மிக நல்ல நிலையில் இருக்கின்றது என்றும் அவர் கூறுகின்றார்.

இந்தக் கருவூட்டலுக்கு தகப்பனிடம் இருந்து திசு(Tissue) பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் பிறக்கும் குழந்தை நிச்சயம் அவரது பிரதியாக(Genetic duplicate) இருக்கும். குழந்தை ஆணாக இருந்தால் தகப்பனும் குழந்தையும் இரட்டையர்கள் போன்று இருப்பார்கள்.

ஜூலை மாத ஆரம்பத்தில், குளோனிங்மூலம் உருவாக்கப்பட்ட அந்தக் கரு 15 வாரங்கள் வளர்ச்சியடைந்திருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. அனேகமாக டிசெம்பர்மாதம் முடிவதற்குள் குழந்தை பிறக்கக்

(11ஆம் பக்கம் பார்க்க)



ஜப்பானில் இடம்பெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த குளோனிங் முறை குறித்து விளக்கும் படம்.



தாக்குதலில் காயமடைந்த சிறுவன் ஒருவன்.

# இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் பலி!

## ஒன்பது குழந்தைகள் உட்பட மேலும் 14 பேர் உயிரிழப்பு!!

காஸா,ஜூலை24

காஸா பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் நேற்று நடத்திய குண்டுத் தாக்குதலில் ஹமாஸ் இயக்கத் தலைவர் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்.

நள்ளிரவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில 9பேர் குழந்தைகள் என்று பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது தலைவர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதை ஹமாஸ் இயக்கத்தினர் உறுதிசெய்துள்ளனர். கொல்லப்பட்ட தலைவரின் பெயர் ஷெய்க் சலா ஷஹடா என்பதாகும்.

தமது படையினர் நடத்திய வான தாக்குதல் பெரு வெற்றி பெற்றுள்ளது என்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்தார். இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்காக அவர் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

தீவிரவாதிகளுடன் இணக்கம் எதனையும் தனது அரசு ஏற்படுத்திக்கொள்ளாது என்றும் -

இத்தகைய தாக்குதல்கள் மேலும் தொடரும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

இந்தத் தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டதற்கு ஐநா பொதுச செயலர் கோபி அனான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இஸ்ரேல், அப்பாவிப் பலஸ்தீனர்களைக் கொல்வதை இன்னும் நிறுத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலில் 12 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜிடியொன் மெயர் கூறினார்.

இஸ்ரேலின் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை கடுமையாக விமர்சித்த பலஸ்தீன அதிகாரிகள், இவ்வாறான மனிதப் படுகொலைகளை நிறுத்த சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் -

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலைக் கண்டித்து பெரும் எடுப்பிலான ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் போராட்டங்களையும் நடத்துவதற்கு பலஸ்தீனர்கள் தயாராகி வருவதாக செய்திகள் தெரிவித்தன. இந்தத் தாக்குதல் மூலம் ஏற்கனவே இஸ்ரேல் மீது பலஸ்தீனர்களுக்கு இருந்த வெறுப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம)





தாக்குதலில் ஹமாஸ் தலைவரின் வீடு சின்னாபின்னமாகிக் கிடப்பதையும், உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை பலஸ்தீனர்கள் அப்புறப்படுத்துவதையும் படங்களில் காணலாம்.

### பாக். மக்கள் கட்சித் தலைமையில் மாற்றம் இல்லை

இஸ்லாமாபாத்,ஜூலை24

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவராகத் தொடர்ந்தும் பெனாஸிரே பதவி வகிப்பார் என அக்கட்சியின் பொதுச் செயலர் ரஸா ரப்பானி அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின்மூலம், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பின் திட்டத்தை முறியடிக்கும் வகையில் பெனாஸிர் வியூகம் அமைத்து வருகிறார் என வெளியான செய்திகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் மக்கள் கட்சிப் பொதுச் செயலர் ரப்பானி கூறுகையில்:-

வதந்திகள் மூலமாக எங்கள் கட்சிக்கு எதிராக பாகிஸ்தானிய இராணுவம் சதி செய்து வருகிறது. பெனாஸிரின் தலைமை தொடர்பாக கட்சிக்குள் கருத்துவேறுபாடுகள் எதுவும் கிடையாது. பெனாஸிர் கட்சித் தலைவராகப் பதவி வகிப்பதையும், பிரதமராவதையும் தற்போதுள்ள சட்டங்கள் தடைசெய்யமுடியாது என்றார்.

(ம)

### உலகின் மிகச்சிறிய தேசிய பூங்கா மலேசியாவில்!

மலேசியாவில் பினாங் மாகாணத்தில் உலகிலேயே மிகச்சிறிய தேசியப் பூங்கா அமைக்கப்படவிருக்கிறது.

உலக அளவில் ஒரு தேசியப் பூங்கா ஆயிரம் ஹெக்டேயர் பரப்பில் இருக்கவேண்டும் என்பது விதிமுறை. பினாங்கில் அமையவிருக்கும் பந்தாய் ஏக்கக் வனப் பகுதியில் அமைக்கப்பட இருக்கும் இந்த தேசியப்பூங்கா ஆயிரத்து 200 ஏக்கர் கொண்டது. இதுதான் உலகின் மிகச்சிறந்த சிறிய தேசியப்பூங்கா ஆகும்.

மேலும் இது நகர்ப்புறப்பகுதிக்கு மிக அருகில் உள்ள தேசியப் பூங்கா ஆகும்.

(ஒ)

## தமிழகத்தை பிரிக்கும் யோசனை: டாக்டர் ராமதாஸ் விளக்கமளிப்பு

சென்னை,ஜூலை24

தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியிருந்தார். இதற்கு பலவிதமான விமர்சனங்கள் எழுந்தன. இதனையடுத்து தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கச் சொன்னதற்கான காரணத்தை அவர் விளக்கி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் -

நிர்வாக வசதிக்காகவும், வளர்ச்சிப் பணிகளில் மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களுக்கு தனிக் கவனம் செலுத்தவும், நாட்டின் இதர பகுதிகளில் மாநிலங்கள் பிரிக்கப்படுவதைப் போலவும், தமிழ்நாட்டையும் இரண்டாகப் பிரிக்கலாம் என்று யோசனை தெரிவித்தேன்.

"இந்த யோசனை நாட்டு நலனுக்கு எதிரானது; தமிழகத்தை பலவீனப்படுத்தி விடும்" என்றெல்லாம் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லோருக்கும் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அண்மையில மூன்று புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்ட போது மத்திய அரசு ஓர் அறிவிப்பினை வெளியிட்டது.

"வளமான - வலிமையான இந்தியாவை உருவாக்கும் திட்டத்தின் அம்சமாகத்தான் மூன்று புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாட்டின் நலனுக்காகத்தான் புதிய மாநிலங்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயேதான் தமிழகத்தையும் இரண்டு மாநிலமாகப் பிரிக்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. வளமான தமிழ்நாடு; வலிமையான இந்தியா என்ற குறிக்கோளுடன்தான் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன் - என்றுள்ளது.

(ஒ)

## அமெரிக்க மெய்ப்பாதுகாவலர்கள் கோருகின்றார் ஆப்கான் அதிபர்

காபூல்,ஜூலை24

தனது பாதுகாப்புக்கு அமெரிக்க மெய்ப்பாதுகாவலர்கள் வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் கோரியுள்ளார்.


தற்போது ஹர்சாயின் மெய்ப்பாதுகாவலர்களாக உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் முஜாஹிதீன் போராளிகளாவர். இவர்கள் அமெரிக்க இராணுவத்தினிடம் பயிற்சி பெறுபவர்களாவர்.

ஆப்கானில் முன்னர் பல ஆயுதக் குழுக்கள் இயங்கி வந்தன. தற்போது ஆப்கானுக்கான இராணுவம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆயுதக் குழுக்களை அரசு கட்டுப்படுத்தி வருகின்றது.

அரசின் இந்தச் செயற்பாடுகளால் குறுநில மன்னர்கள் போன்று செயற்பட்டு வந்த இத்தகைய ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். அவர்களால் ஹர்சாயின் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று கருதப்படுகின்றது. அது தவிர அல்கெய்டா மற்றும் தலிபான் அமைப்புக்களாலும் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இவர்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தற்போதுள்ள மெய்ப்பாதுகாவலர்கள் போதாது என்று ஹர்சாய் கருதுவதாக அவரது பேச்சாளர் தெரிவித்தார். இதனாலேயே தனது பாதுகாப்புக்கு அமெரிக்க மெய்ப்பாதுகாவலர்கள் தேவை என்று அவர் கோருகின்றார் என்றும் அவர் கூறினார்.

(ம)



அமெரிக்க இராணுவத்திடம் பயிற்சி பெறும் ஹர்சாயின் மெய்ப்பாதுகாவலர்கள்.

### பாகிஸ்தான் பெண் தூதுவர் அரசியலில்!

வாஷிங்ரன்,ஜூலை24

அமெரிக்காவுக்கான முன்னாள் பாகிஸ்தான் தூதுவர் மலேகா லோதி என்ற பெண்மணி அரசியலில் குதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கான புதிய பாகிஸ்தான் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து விரைவில் நாடு திரும்பவுள்ள மலேகா செய்தியாளர்களிடம் பேசுகையில், நான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும். இப்போதைக்கு உறுதியாக எதனையும் சொல்லமுடியாது என்று கூறியுள்ளார்.

(ம-9)

## 'நோபல்' பரிசு வென்ற எழுத்தாளரின் முகத்தோற்றம் இருந்தால் பரிசு!

### அமெரிக்காவில் போட்டி

கீவெஸ்ட்,ஜூலை24

அமெரிக்க எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர். அவர் இறந்து நீண்டகாலம். ஆனாலும், அவர் கடைசிக் காலங்களில் வாழ்ந்த கீவெஸ்ட் நகரமக்கள் அவரது பிறந்த நாளை வருடாந்தம் கொண்டாடி வருகிறார்கள்.

அண்மையில் எர்னஸ்டின் 203 ஆவது பிறந்த நாளை கீவெஸ்ட் நகர மக்கள் வித்தியாசமான முறையில் கொண்டாடினார்கள்.

எழுத்தாளர் ஹெமிங்வேபோல முகத்தோற்றம் உடையவர்களுக்குப் போட்டி வைத்தார்கள். 154 பேர் ஹெமிங்வே போன்று வெள்ளைத் தாடியுடன் போட்டியில் கலந்துகொண்டார்கள். அவர்களில் அரிசோனாவின் யோனிக்ஸ் நகரைச் சேர்ந்த - முடி அலங்காரம் செய்பவரான - ரோனி தோமஸ் (வயது 61) முதல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

(ம-9)

### இந்தியாவில் ஆபாசப் பட விவகாரம்:

## தணிக்கைக் குழுத் தலைவர் திடீரென்று பதவி விலகினார்!

ஆபாசப் படங்களுக்கு அனுமதி கொடுக்கலாம் என்ற தனது யோசனையை இந்திய அரசு ஏற்காததால் தணிக்கைக் குழுத் தலைவர் ராஜினாமச் செய்தார்.

உலக அரங்கில்

பிரபல இந்தி நடிகர் தேவ் ஆனந்தின் சகோதரரான விஜய் ஆனந்த் என்பவரே இவ்வாறு பதவி விலகியவராவார்.

இந்தியத் திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள் சேர்க்கப்படுவதைத் தடுக்க ஆபாச சினிமா படங்களுக்கு அனுமதி வழங்கலாம் என்று விஜய் ஆனந்த் அரசுக்கு யோசனை கூறியிருந்தார்.

'எக்ஸ்' சான்றிதழ் வழங்கி இது போன்ற திரைப்படங்களை வெளியிடலாம். இதற்குக் கூடுதல் வரி விதிக்கலாம் போன்றவை அவரது யோசனைகளாகும். ஆனால், இதை மத்திய அரசு ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டது. இதனாலேயே அவர் பதவி விலகினார்.

(ஒ)

## பிரிட்டிஷ் ஏழைச் சிறுவருக்கு இளவரசர் சாள்ஸ்மூலம் உதவி

லண்டன்,ஜூலை24

லண்டனில் ஏழைச் சிறுவர்களுக்கு உதவுவதற்கென நிதி திரட்டப்பட்டு வருகிறது. இதனை அறிந்த பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ், ஏழைச் சிறுவர்களுக்கு உதவத் தானும் முன்வந்துள்ளார்.

இதற்கான நிதியை சேகரிப்பதற்காக சாள்ஸுடன் அமர்ந்து விருந்து உண்ண 6 லட்சம் ரூபா என அறிவிக்கப்பட்டது. விருந்தில் சுமார் 300 பேர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று, குளோசெஸ்டர்ஷைர் என்ற இடத்தில் உள்ள ஹைகுரோப் எஸ்டேடிலும் சாள்ஸுடனான விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விருந்தில் கலந்துகொள்ள பிரிட்டிஷ் கோடீஸ்வரர் ஒருவர் ஒரு கோடியே 4 லட்சம் ரூபாவை செலுத்தியுள்ளார்.

(ம-9)

உதயன்

## என்று தணியும் இந்தத் தாகம்?

குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டி, அதற்கு ஆவலை ஏற்படுத்தி, ஓடவிடுவது போன்ற நிலைமை வலி.வடக்கு, தென்மராட்சி மக்களுக்கு.

தங்களது சொந்த வீடு வாசல்களை விட்டு யுத்தத்தின் காரணமாக விரட்டியடிக்கப்பட்டவர்கள் இந்த மக்கள். இடம்பெயர்ந்து உறவினர், தெரிந்தவர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் இந்த மக்கள், தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவது எப்போது என்று ஏங்கித் தவித்தபடி காலத்தைக் கழிக்கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துவிட்டது; அதில் உள்ள ஏற்பாடுகள் தமது சொந்த இடங்களுக்கு தாம் திரும்பிச்செல்ல வழிவகுக்கும் என்று நினைத்து ஆவல் கொண்டார்கள் அவர்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, மக்களின் வீடுகள், குடியிருப்புகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறவேண்டும். அதற்கான காலக்கெடு முடிய இன்னும் எட்டு நாள்கள்தான் உள்ளன.

இந்த ஒப்பந்தப்படி தமது வீடுகள், காணிகள், நிலங்களிலிருந்து படையினர் வெளியேறி, அவற்றை மீண்டும் தங்களிடம் ஒப்படைப்பர் என்ற ஆவலோடு காத்திருக்கும் வலி.வடக்கு மற்றும் தென்மராட்சி மக்களுக்கு இதுவரை ஏமாற்றம்தான் மிஞ்சி நிற்கின்றது.

"படை நடவடிக்கைகளில் தங்கள் வீடு, வாசல்கள் அழிந்துவிட்டன. தோட்டம், துரவு எல்லாம் நாசமாகிவிட்டன. என்றாலும் வழிவழி வந்த சொத்தாக எஞ்சி நிற்கும் காணியையாவது தம்மிடம் மீள ஒப்படைப்பார்கள். ஒரு கொட்டிலை அமைத்தாவது எங்கள் சொந்தக்காணியில் குடியேறுவோம். பற்றைக் காடுகளை வெட்டி, அழிந்துபோன கட்டடச் சிதைவுகளை அகற்றி, காணி நிலங்களை தோட்டங்களாக்கலாம்" என்ற நப்பாசை அந்த மக்களுக்கு. ஆனால் எஞ்சுவதோ படுஏமாற்றம்தான்.

படைவெளியேற்றம் இந்தா, அந்தா என்கின்றார்கள். மிகவிரைவில் நடக்கும் என்கிறார்கள். ஆனால், செயலில் முன்னேற்றம் ஏதும் இருப்பதாக நம்பிக்கை ஏற்படவில்லை. குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டி அதை ஓடவிடுவது போல நாளை, நாளை என்று அந்த மக்களை நம்பிக்கையைத் தளரவிடாது ஓடப்பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள்.

"பலாலி விமான நிலையத்தின் எல்லையில் இருந்து அரைமைல் தூரத்தை மட்டும் பாதுகாப்பு வலயமாகப் பேணி, எஞ்சிய பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிப்பது என அரசு உயர்மட்டம் முடிவுசெய்துவிட்டது. பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரோடு தானும் பங்குபற்றிய சந்திப்பு ஒன்றில் இதுபற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும் பிரதேசங்கள் தொடர்பான வரைபடம்கூட ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது" - என்றெல்லாம் அமைச்சர் மகேஸ்வரன்கூட தமது வழமைப் பிரகாரம் பத்திரிகைகள்மூலம் முழங்கிவிட்டார்.

அது மட்டுமல்லாமல், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் தம்பாட்டுக்கு இராணுவத் தளபதி, படை உயரதிகாரிகள், அமைச்சர் மகேஸ்வரன், தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் என்று கூட்டத்துடன் அந்த இடங்களுக்குச் சென்று, ஒரு சூறாவளி 'விசிட்' அடித்து கூட்டங்களையும் நடத்திவிட்டுப் போய்விட்டார்.

பனை மரங்கள் தறிக்கப்பட மாட்டா என்ற உறுதிமொழியைத் தவிர, யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நம்பிக்கையை, ஆறுதலைத் தரும் முன்னேற்றகரமான எந்தச் செயற்பாடும் இடம்பெற்றதாக இல்லை.

கூட்டங்களில் கூறப்பட்ட உறுதிமொழிகளும் கூட வழமையான வெற்றுவேட்டு விவகாரமாக இருக்குமோ என்ற நிலைப்பாட்டைத்தான் இடம்பெயர்ந்த மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளன. இதுதான் உண்மை.

இது விடயத்தில் மீண்டும் படை அதிகாரிகளுடனும் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் கலந்தாலோசனை செய்த பின்னரே முடிவு என இப்போது கூறுகின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

அடுத்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணிலை நாங்கள் சந்திக்கும்போது இது விடயத்தில் நல்லதொரு முடிவைப் பிரதமர் தராவிட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்கிறார்கள் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

இப்படி இழுபடும் இந்த விவகாரத்தில் சுமுக முடிவு கிட்டுவது எப்போது? இடம்பெயர்ந்தோரின் ஏக்கம் தணிவது எங்ஙனம்?

## 20 ஆண்டுகளின் பின்னர் விவசாயத் தொகைமதிப்பீடு

மண்டைதீவு,ஜூலை24

தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் விவசாயத் தொகை மதிப்பீடொன்று நடத்தப்படவுள்ளது என்று தொகை மதிப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜி.டபிள்யூ.நாணயக்கார அறிவித்துள்ளார்.

சுமார் இருபதாயிரம் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி, நாடு முழுவதிலும் உள்ள இருபத்தைந்து லட்சம் விவசாயிகளிடம் இருந்து விவரங்கள் சேகரிக்கப்பட இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பத்தாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் குடிசன மதிப்பீட்டைத் தொடர்ந்துவரும் அடுத்த ஆண்டில் இந்த மதிப்பீடு நடத்தப்படுவது வழக்கமாகும். எனினும் சீரற்ற நாட்டுச் சூழ்நிலை காரணமாகக் கடந்த இருபது வருடங்களாக இந்தத் தொகை மதிப்பீடு நடத்தப்படவில்லை.

இந்தக் கணக்கெடுப்பின்பொழுது விவசாயச் செய்கையாளர்களின் எண்ணிக்கை, பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படும் நிலப்பரப்பின் அளவு, செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர் வகை, கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் பாவிக்கப்பட்ட இயந்திரப் பொறிகள், உபகரணங்களின் எண்ணிக்கை என்பன பிரதானமாகக் கருத்திற்கொள்ளப்படும்.

விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், விவசாய விரிவாக்கல் திட்டங்கள் என்பவற்றை வகுத்து திட்டமிட்டு, பின் அமுலாக்கும் துறைசார்ந்த நிபுணர்களுக்குப் பெறுமதி வாய்ந்த தகவல்களை வழங்குவதும், இந்தத் துறைசார்ந்த புவியியல், பொருளியல், சமூகவியல், விவசாயம் போன்ற கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அடிப்படைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதும் இதன் அடிப்படை நோக்கங்களாகும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கணக்கெடுப்புக்கு வரும் உத்தியோகத்தர்களிடம், சரியான தகவல்களை வழங்குவதற்கு தமது பெற்றோர்களுக்கு மாணவர்கள் உதவவேண்டும் என்று பாடசாலை மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ம-ரி)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு பொருள்கள் அன்பளிப்பு!

கரவெட்டி,ஜூலை24

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வெளிநாட்டில் உள்ளவர்கள் பணம், உடை, உணவுப் பொருள்கள் என்பவற்றை வழங்கியுள்ளனர்.

கனடாவில் இருந்து வெளிவரும் சர்வதேசப் பத்திரிகையான 'வேல்ட் நியூஸ்' மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையின்நிலை பற்றியும் அதன் தேவை பற்றியும் செய்தியை வெளியிட்டதன் எதிரொலியாகவே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

கனடா, ஹொலண்ட், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலுள்ள - தற்போது அந்நாட்டுப் பிரஜைகளான - தமிழ்மக்கள் வைத்தியசாலைக்கு நேரில் விஜயம்செய்து மேற்படி உதவிகளை பொறுப்பதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளையிடம் கையளித்துள்ளார்கள். (ம-70)

## தெங்கு செய்கையாளர்கள் புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம்,ஜூலை24

வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரதிநிதிகளைச் சந்தித்து குடாநாட்டில், குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்களில் விவசாய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

அங்கு கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்து தெங்கு செய்கையாளர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

☆ தென்னந்தோட்ட உரிமையாளர்கள் உடனடியாகத் தமது தோட்டங்களுக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பது.

☆ தோட்டப் பராமரிப்பை உரிமையாளர்களே பொறுப்பேற்பது.

☆ கடந்தகாலங்களில் யுத்த நடவடிக்கைகளால் தோட்டங்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்புக்கு நஷ்டஈடு வழங்குவது.

☆ பச்சிலைப்பள்ளியில் உள்ள தோட்டங்களுக்கு உரிமையாளர்களும் தொழிலாளர்களும் சுமுகமாகச் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதி.

☆ தோட்ட விளைபொருள்களைச் சுமுகமாகச் சந்தைப்படுத்தும் வசதி.

☆ தோட்டப் பிரதேசங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுதல்.

☆ திருடர்களைக் கட்டுப்படுத்துவது.

போன்ற முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன - என்றுள்ளது. (ம)

## வலி.வடக்கில் உள்ள ஆஸ்பத்திரிகளை புனரமைக்க தலா 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை என்பவற்றை புனரமைப்பதற்கு தலா 50லட்சம் ரூபாவீதம் நிதி ஒதுக்கீடு செய்வதாக சுகாதார அமைச்சர் தமக்கு உறுதியளித்துள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அண்மையில் சுகாதார அமைச்சரைச் சந்தித்து மாவை சேனாதிராசா எம்.பியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிவமகாராசாவும் பேசினர். அப்போதே அவர் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை தற்போது கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதன் சொந்தக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கே 50 லட்சம் ரூபாவை ஒதுக்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு சில திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடங்களுக்கு வர்ணம் தீட்டுதல் மற்றும் கட்டடத் திருத்தவேலைகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க அவசியமான போபோல் யூனிற் பழுதடையாமல் நல்லநிலையில் உள்ளது. அதேசமயம், ஆஸ்பத்திரியில் இருந்த இயந்திர உபகரணங்களில் ஒரு பகுதி சேதமடைந்தும் களவாடப்பட்டும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புற்றுநோய் வைத்தியசாலையின் கூரைவேலை மற்றும் உபகரணக் கொள்வனவுக்கும் 50லட்சம் ரூபா ஒதுக்கீடு வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இரு வைத்தியசாலைகளுக்குமான திருத்த வேலைகளும் மூன்று மாதகாலத்தினுள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டது. (ம-86)

## வடக்கு - கிழக்கில் உள்ள அரச ஊழியருக்கு ஓய்வூதியம் வழங்குவதில் புதிய நடைமுறை அமுல்

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் ஓய்வூதியக் கணிப்பீடுகள் தொடர்பான நடவடிக்கைகளை அந்தந்தத் திணைக்களங்களே செய்யவேண்டும் என்ற நடைமுறை கடந்த ஜூன் மாத முதலாம் திகதிமுதல் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை 1995ஆம் ஆண்டுமுதல் நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்டது. எனினும், வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் நிலவிய யுத்தசூழ்நிலைகளால் இந்த நடைமுறை இப்பகுதி அரச திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த வேலைகளை அந்தந்தப் பிரதேச செயலகங்களே மேற்கொண்டுவந்தன.

இதனால் ஓய்வுபெற்றவர்கள் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு நீண்டகாலமாகத் தவம்கிடக்க வேண்டி ஏற்பட்டது. இதனைத் தவிர்க்கும்வகையில் தற்போது அந்தந்தத் திணைக்களங்களே தமது ஊழியர்களின் ஓய்வூதியக் கணிப்பீடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இனிவரும் காலங்களில் அரச ஊழியர்களின் ஓய்வூதியங்கள் அவர்கள் பணிபுரியும் திணைக்களங்களாலேயே கணிப்பீடு செய்யப்பட்டு, பிரதேச செயலகங்கள் ஊடாக அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இது தொடர்பான அறிவித்தல் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரினால் மாவட்டச் செயலாளர்களுக்கு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ம-[illegible])

**நாளை**

ஆடி 09
வியாழக்கிழமை
(25.07.2002)
திதி: பிரதமை
பிற்பகல் 3.31 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முன்னிரவு 1.39 வரை.
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நீ பிறந்தனாய் இரு; ஆனால் உலக மாயையில் அல்ல; இறைவனிடமும் உள்ள அன்பில்.

பரிசோதகர் நேற்று வரவில்லை

## சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்கள் ஏமாற்றம்

மோட்டார் வாகனப் பரிசோதகர் கொழும்பில் இருந்து வருகை தராத காரணத்தினால் நேற்று யாழ்.செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான சோதனைகள் இடம்பெறவில்லை.

இதனால் நேற்றையதினம் சோதனைக்குவருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட வாகன ஓட்டுநர்கள் அனைவரும் தமக்குரிய எழுத்துப் பரீட்சையை மட்டும் முடித்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடுகளுக்குத் திரும்பினர்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதிப் பத்துத் தினங்களும் இந்தச் சோதனைகள் இடம்பெறும் என்று போக்குவரத்துத் திணைக்களத்தினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதும் நேற்று அது நடைபெறவில்லை.

வாகனங்களை மறித்துப் பொலீஸார் சாரதி அனுமதிப்பத்திரம் உட்படப் பல்வித சோதனைகளையும் மேற்கொள்ளும் தற்போதைய நிலையில் யாழ்.மாவட்டத்துக்கெனத் தனியான ஒரு மோட்டார் வாகனப் பரிசோதகரை நியமிக்காமை குறித்துப் பலரும் தமது அதிருப்தியைத் தெரிவிக்கின்றனர்.

உரியவர்கள் இதுவிடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். (ம-10-8)

## எல்லைப்படை வீரர் உயிரிழப்பு!

கிளிநொச்சி,ஜூலை24

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கி வெடி விபத்தில் தமிழீழ தேசிய துணைப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கண்டியைச் சேர்ந்த லெப்டினன்ட் தர்மாம்பான் (கனரத்தினம் தர்மாம்பான்) என்பவரே உயிரிழந்தவராவார். (ம)

## செயலமர்வுகள்

தென்மராட்சி,ஜூலை24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான தொடருறு கல்விச் செயலமர்வுகள் பின்வரும் திகதிகளில் பின்வரும் பாடசாலைகளில் நடைபெறுமெனவும் -

பாடங்களுக்குரிய ஆசிரியர்களை அனுப்பிவைக்குமாறும் அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

நாளை வியாழக்கிழமை வரணி மகா வித்தியாலயத்தில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு செயலமர்வும் -

27ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கணனிக் கல்வி செயலமர்வும் -

வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் 29ஆம் திகதி வகுப்பறை முகாமைத்துவமும் -

31ஆம் திகதி கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு, செயலமர்வும் -

ஓகஸ்ட் முதலாம் திகதி விஞ்ஞானம் கற்பித்தல் நுட்பங்கள் ஆகிய செயலமர்வுகளும் -

இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)


**ரூபா 5,00,000**

மாதச்சம்பளமாக பிறதேசத்தில் உழைக்கும் திறமையும் தகுதியும் பெற A/L படித்தவர்களாயிருக்க வேண்டும். மூன்று வருடப் பயிற்சி, 24 சோதனைகள், செலவு 4 1/2 லட்சம்.
தொடர்பு:
**திருஞானாஸ் கட்டடம்**
மத்திய பேருந்து நிலைய முன்பாக
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# நெஞ்சைவிட்டு நீங்காத எங்கள் அன்புத் தெய்வத்தின்
# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

**Mummiel your unexpected loss continues with much and mighty sorrow of eternity.**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1931 | 1999 |
| 09 | 07 |
| 25 | 28 |



கம்பர் மலை

## திருமதி சிவகாமி இராமச்சந்திரன் (மம்மி)

திதி: 24-07-2002

*எங்கள் இதயத் தெய்வம், குடும்பத் தலைவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நெற்கொழு ஆதி வைரவ சுவாமியை வேண்டி நிற்கும்:*

பாசமிகு
திரு.ம.இராமச்சந்திரன் (குடும்பத் தலைவர்) மற்றும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"சிவகோட்டம்",*
*கம்பர் மலை,*
உடுப்பிட்டி வடக்கு.

(6220)


விலை 14/=




# சுடர் ஒளி

## 23-07-2002 இதழில்

- மறக்க முடியாத நாள் ஜூலை 23.
- விடுதலைப் போருக்கு உரமான லெப்.சீலன்.
- 1958 இல் வவுனியாவைக் காக்க புறப்பட்ட அடங்காத் தமிழன்.
- தென்மராட்சி மக்களின் பொறுமைக்குச் சோதனை.
- அதிகாரிகளின் மனப்போக்கு மாறாதவரை தீராது பிணக்கு.
- நம்பிக்கை தரும் ஏ-9 பாதை திறப்பு.
- ஜனாதிபதியின் கைப்பை கிளப்பிய சர்ச்சை.
- ஜெயலலிதாவை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சந்திக்காதது ஏன்?
- மற்றும் சினிமா, சிறுவர், இணையத்தளங்களிலிருந்து, மசாலா, விளையாட்டு, பெண், இலவச மருத்துவ ஆலோசனை உட்பட சுவையான அம்சங்கள்.

(சி-23037)

சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3 ரூபாவால் குறைக்கப்படுகிறது.
*உங்கள் முகவரிடம் மறக்காமல் கேட்டுவாங்குங்கள்.*

# வடபகுதி மீனவர்களுக்கு அரியதோர் வாய்ப்பு!




## யமஹா அவுட்போட் மோட்டர்

தடைகள் நீக்கப்பட்டுச் சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வருவதால் தமது பாரம்பரிய கடற்றொழிலை மீண்டும் ஆரம்பிக்க முனையும் வடபகுதி மீனவர்களுக்குத் தரமுயர்ந்த யமஹா அவுட்போட் மோட்டர்களைப் பெற்றுக்கொடுக்க அன்று போலவே இன்றும் இந்நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் அசோசியேட்டட் மோட்டர் லங்கா நிறுவனம் ஆயத்தமாகிறது. தூரக்கடல் தாண்டி மீன்பிடித்துப் பாதுகாப்பாக வீடு திரும்ப அருந்துணையாகும் அதிவேக யமஹா அவுட்போட் மோட்டர்கள் விரைவில் தருவிக்கப்பட இருக்கின்றன.

கடைசி நேரம் வரை காத்திருந்து ஏமாறாமல், உங்களுக்குத் தேவையான அவுட்போட் மோட்டரை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

- உயர்ந்த தொழில்நுட்பம்
- அதிவேக அதிசக்தி எஞ்ஜின்
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- நீடித்த உழைப்பு

முன்கூட்டியே பதிவுசெய்வதற்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்:

**YAMAHA**

**அசோசியேட்டட் மோட்டர் லங்கா நிறுவனம்**
14/ 9, ஜினரத்தன மாவத்தை, கொழும்பு 2. தொலைபேசி: 304231-2, 077-389573
அல்லது நாடெங்குமுள்ள விற்பனை முகவர்கள்

**சப்ரியா மோட்டர்ஸ்**
எஸ்.கே. வீதி,
பெற்றிக்கு முன்னால்
கற்பிட்டி.
032-60742

**புதிய சிலாபம் யமஹா சென்டர்**
சிறைச்சாலை வீதி,
சிலாபம்.
032-23003

**விஜய மரைன் சென்டர்**
தூவ சந்தி,
நீர்கொழும்பு.
031-38486

**பிரான்சிஸ் என்டர்பிறைசஸ்**
இல. 8, 2 ஆம் மாடி,
மத்திய மீன் சந்தை,
கொழும்பு 11
01-434475, 344584

**பிரான்சிஸ் என்டர்பிறைசஸ்**
பெரிய கடை
மன்னார்.
023-32135, 32424

**தாரகா மோட்டர்ஸ்**
காலி வீதி,
அளுத்கம.
074-289900

**யமஹா சேல்ஸ் சென்டர்**
118, புதிய தங்காலை வீதி,
கொட்டுவேகொடை,
மாத்தறை.
041-21739

**ரீமா என்டர்பிறைசஸ்**
இல. 82/2, திஸ்ஸ வீதி,
ஹம்பாந்தோட்டை.
047-20707

**நடுனி யமஹா சென்டர்**
வடக்கு கடல் வீதி
திருகோணமலை
026-21296, 20295

**சிநோர் பவுண்டேஷன் லிமிட்டெட்**
335, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
01-448040

**தனுஷ்கா மரைன்**
600, காலி வீதி,
தொரத்துடுவ, மொறட்டுவை.
01-646046

**செந்தூரன் ட்ரேடிங் கம்பனி**
338, மத்திய வீதி,
திருகோணமலை - 0263-21183

**சீப் பலஸ்**
பிரதான வீதி,
மருதமுனை,
கல்முனை.
067-29463

**ரத்னம் என்டர்பிறைசஸ்**
169, பிரதான வீதி,
முல்லைத்தீவு.
வவுனியா - 024-21832

(சி-23029)
Advantage-DY&R

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 - 06 - 1947

மறைவு 04 - 08 - 2001

## திருமதி சின்னப்பிள்ளை ஆறுமுகம்

திதி: 24-07-2002

அன்பின் அம்மாவே! அணையாத திருவிளக்கே!!
ஆண்டொன்று போனாலும் ஆறாது எம் துயர்!
ஈன்றவளின் பின்னாலே ஈசனடி சேர்ந்தீரோ?
அழுகின்றோம் நாம் இங்கே ஆறுதல் யார் தருவார்?

(6260)

'செம்பாடு'
கரணவாய் மத்தி, கரவெட்டி.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

# சபிண்டீகரண சிரார்த்த அழைப்பு



10.07.2002இல் தில்லைக்கூத்தன் திருவடிப் பேறெய்திய ஏழாலை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி **மு.கந்தையா B.A.**

*(இளைப்பாறிய ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

அவர்களின் சபிண்டீகரண சிரார்த்தக் கிரியைகள் சித்திரபானு வருடம் ஆடி மாதம் 9ஆம் நாள் நாளை (25.07.2002) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர், மாணவர் அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*'சக்தி முற்றம்',*
*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.*

(6255)



உ
குகமயம்

## நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்

## "குகஸ்ரீ"

## விருது வழங்கும் விழா

காலம்: 25.07.2002 வியாழக்கிழமை காலை 10 மணி முதல் 12.00 மணிவரை.
இடம்: நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம்.

இந்தவருடம் தேவஸ்தானத்தின் "குகஸ்ரீ" விருதினைப் பெறுபவர்
வேதசிவாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தாணு. மகாதேவக் குருக்கள்
தலைவர்: பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்

**நிகழ்ச்சி நிரல்:**

பாலமுருகனுக்கு ஆராதனை
மங்கள இசை: ஈழநல்லூர் P.S.பிச்சையப்பா குழுவினர்
மங்கள விளக்கேற்றல்:
இறைவணக்கம்: திருப்புகழ் - பிரம்மஸ்ரீ சோ.உமாரமணசர்மா
வரவேற்புரை: திரு.தி.செல்வமனோகரன்
அறிமுகவுரை: பிரம்மஸ்ரீ சௌ.சசிகுமாரசர்மா
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
*(நல்லை ஆதீன முதல்வர் - 2ஆவது குருமஹா சந்நிதானம்)*
வண.ஒவிட்டிகமுவே போதிரதனஹிமி தேரர்
*(ஸ்ரீ நாக விகாரை - யாழ்ப்பாணம்)*
தலைமையுரை: பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயா
வாழ்த்துரை: பேராசிரியர் Dr.செ.சிவஞானசுந்தரம் *(நந்தி)*
பிரதமவிருந்தினர்: உயர்திரு.க.கனகரத்தினம் *J.P.U.M.*
*(தலைவர், திவ்விய ஜீவனசங்கம் முதுபெரும் சட்டத்தரணி)*
*விழா நாயகனுக்கு தேவஸ்தானம் சார்பாக பிரதம விருந்தினர் பொன்னாடை போர்த்து தங்கப்பதக்கம் அணிந்து விருதினை வழங்கிக் கௌரவித்தல்.*
வாழ்த்துப்பா: "சம்வாதீஸ்வரர்" பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் வழங்குவார்.

**பாராட்டுக்கள்:**

பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
பிரம்மஸ்ரீ இ.சந்திரசேகர சர்மா
*(திட்ட இணைப்பாளர், சமூக உளநல நிகழ்ச்சித்திட்டம், சாந்திகம்)*
பிரம்மஸ்ரீ நா.சதாசிவ ஐயர்
*(செயலர், நியந்தீர், மேலதிக மாவட்டப் பதிவாளர்)*
பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா
*(பொதுச் செயலாளர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)*
பதிலுரை: விழா நாயகன்
நன்றியுரை: திரு.எஸ்.பிரதாபன்

ஆடிவேல் விழா: 26, 27, 28.07.2002 வெள்ளி, சனி, ஞாயிறு
மூன்று நாள்கள் நடைபெறும்.
28.07.2002 ஞாயிறு மாலை 7.00 மணிக்கு மெற்றாஸ்
பிரம்மஸ்ரீ சோ.உமாரமண சர்மா அவர்களின்
"தெய்வீக இசையரங்கு" பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.
இரவு 8.00 மணிக்கு தேவஸ்தான சமயப் பொது அறிவுப் போட்டி
பரிசில்களும் தொண்டர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்குபவர்:
உயர்திரு.க.தேவராஜா *(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!!

ஸ்ரீ பாலகதிர்காமம், நல்லூர். (6290) - *தேவஸ்தானம்.*

## 'றாண்' அமைப்புக்கு நீர்கொழும்பில் கிளை

புனர்வாழ்வு, மீள்குடியமர்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையின் (றாண்) கிளைக்காரியாலயம் இன்று காலை 10மணிக்கு இல.11, ஆவேமரியா வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. திறப்புவிழாவில் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)


யாழ். வரும் உல்லாசப் பயணிகளுக்கு

ஒரு நற்செய்தி!

வெலிங்டன் சந்திக்கு அருகில் இல.54, மணிக்கூண்டு வீதியில் உங்களுக்கு ஏற்ற வசதிகளுடன்

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி

திறந்துவைக்கப்பட்டுள்ளது.

JAFFNA TOURIST INNS,
NO: 54, CLOCK TOWER ROAD, JAFFNA.
(NEAR WELLINGTON JUNCTION)

(6242)


ஓம் சரவணபவ



புங்குடுதீவு பெருங்காடு

## அருள்மிகு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி தேவஸ்தான

## மண்டலாபிஷேகப் பூர்த்தி விஞ்ஞாபனம்

25.07.2002 - வியாழக்கிழமை

முருகப்பெருமான் மெய்யடியார்களே!

நிகழும் சித்திரபானு வருடம் ஆடித்திங்கள் 09ஆம் நாள் நாளை (25.07.2002) வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு (1008) சங்காபிஷேகம் நடைபெறும். அன்றையதினம் அடியார்கள் அனைவரும் வருகைதந்து வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமானைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு வாழும் வண்ணம் வேண்டுகிறோம். மாலை விஷேட பூசையும், திருக்கல்யாண வைவமும் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

மாலை 5.00 மணிக்கு: மங்களவாத்தியம்
1.ஆனந்தன் புதல்வர்கள்
2. ஈழநல்லூர் முத்துலக்சுமி சகோதரிகள்

மாலை 7.00 மணிக்கு: இன்னிசை கானம்
A.R.றகுமான் புகழ் ஆனந்தன் இசைக்குழுவினர்

இரவு 9.00 மணிக்கு: வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான், மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

குறிப்பு: அடியார்கள் பால், தயிர், இளநீர், புஸ்பம் போன்ற திரவியங்களைத் தந்து முருகப்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அழைக்கின்றோம்.

புங்குடுதீவு. (6294) - ஆலய பரிபாலன சபையினர்


# இந்த அரிய சந்தர்ப்பத்தை

நழுவ விட்டு விடாதீர்கள்!!!

- வியாபார பங்காளிகளை சந்திக்க
- உங்கள் பொருட்களையும் சேவைகளையும் விற்க
- உங்கள் பொருட்களை காட்சிக்கு வைக்க

வாருங்கள்

# யாழ் வியாபாரக் கண்காட்சி

ஓகஸ்ட்

3ஆம், 4ஆம், 5ஆம்

திகதிகளில்

யாழ் மத்திய கல்லூரியில்

அனுசரணை
புனர்வாழ்வு, மீழ் குடியமர்வு மற்றும் அகதிகள் அமைச்சு

உடன் கூட்டாக
வடபகுதி புனர்வாழ்வு, மற்றும் மீள் குடியமர்வு அதிகாரசபை



சிடிசி கன்வேன்சன்ஸ் (பிரை) லிமிடட்
38,டட்லி சேனாநாயக்க மாவத்தை,
கொழும்பு-08, இலங்கை
தொலைபேசி: 674950-51,
தொலைநகல் : 674953, 075-332604

(C/23004)

மின் அஞ்சல்: jtf@cdcconv.com இணையத்தளம்: www.cdconv.com

Sudaroli Gnv/X

அழையுங்கள் 072 233275

# வைகோ கைதானதை ஆட்சேபித்து மூதூர், திருமலையில் கண்டன நிகழ்வுகள்

மட்டக்களப்பு,ஜூலை24

ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தும், அவரை விடுதலை செய்யக்கோரியும் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உண்ணாவிரதப் போராட்டமும் கண்டனக் கூட்டமும் இடம்பெற்றன. அதேசமயம், மூதூரில் கண்டனப் பேரணியும் கண்டனக் கூட்டமும் நடைபெற்றன.

திருகோணமலை சிவன்கோயிலடியில் நேற்றுமுன்தினம் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் பாடசாலை மாணவர்கள், மாணவிகள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

தமிழீழ எழுச்சிப் பாடல்கள் அங்கு இசைக்கப்பட்டன. கவிதை அரங்கும் இடம்பெற்றது.

மாலை 4.30 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டம் முடிவுற்றதை அடுத்து கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று அங்கு இடம்பெற்றது.

மூதூர் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பல் வேறு இடங்களிலிருந்து நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் புறப்பட்ட கண்டனப் பேரணி காலை 9.30 மணியளவில் சேனையூர் நாகம்பாள் ஆலய முன்றிலை வந்தடைந்து. அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் உட்பட பலர் அங்கு உரையாற்றினர். (ஐ-3-9)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுப் பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

வன்னியில் இருந்து வந்து தமது சொந்த இடங்களில் குடியேறிய மக்களுக்கு யாழ்ப்பாண அரங்க செயற்பாட்டுக்குழு வீட்டு உபகரணப பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அரங்கச் செயற்பாட்டுக் குழுவின இணைப்பாளர் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இத்தகவல தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதேச செயலரால் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு உபகரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக சங்கானைப் பகுதியில் உள்ள 17 கிராமசேவகர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கும், சண்டிலிப்பாயில் 4 கிராமசேவகர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கும் இப்பொருள்கள் விநியோகிககப்பட்டுள்ளன.

வன்னியில் இருந்து மீளக்குடியேறிய மக்கள் தமது வாழ்வை மீள ஒழுங்குபடுத்துவதற்கு இப்பொருள்கள் மிக அவசியமானதாகின்றன.

இத்திட்டத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் அனுசரணை உதவிகளை வழங்கியுள்ளது.

இப்பொருள்கள் விநியோக நிகழ்ச்சியில் யாழ்.அரங்கச் செயற்பாட்டுக்குழு சார்ந்த சி.சுதாகரன், கு.லக்ஷ்மணன் ஆகியோரும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சார்ந்த எஸ்.மகேந்திரனும் கலந்துகொண்டனர்.

அரங்கச் செயற்பாட்டுக்குழு நிவாரண புனர்வாழ்வுச் செயற்பாட்டில் நேரடியாகப் பங்குகொள்வது இதுவே முதற்றடவையாகும். தொடர்ந்தும் வனனியில் இருந்து மளக்குடியேறுபவர்களுக்கான உதவித்திட்டம் முன்னெடுக்கப்படும் - என்றுள்ளது. (ஒ)

## வெடிபொருள் வெடித்து பெண் காயம்

கிளிநொச்சி,ஜூலை24

கிளிநொச்சி நகரில் அரச அதிபரின் விடுதிக்குப் பின்புறமாக உள்ள மண்பிட்டி ஒன்றை மண்வெட்டியால் கொத்திய குடும்பப்பெண் ஒருவர் அங்கு புதைந்திருந்த வெடிபொருள் வெடித்ததில் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 7.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தாயான உதயகுமார் தபோதினி (வயது 34) என்பவரே காயமடைந்தார்.

கண்ணிலும் நெஞ்சிலும் பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## குருநாகலில் 21 ஜோடிகள் கைது!

கொழும்பு,ஜூலை24

குருநாகலில் பொது இடங்களில் காதல் 'லீலைகளில்' ஈடுபட்டதாகக் கூறப்படும் 21 ஜோடிகளை பொலீஸார் கைது செய்தனர்.

பின்னர் அவர்களுக்கு அறிவுரை கூறி எச்சரித்த பொலீஸார் அவர்களை விடுதலைசெய்தனர். (ம)

## உடத்தலவின்ன படுகொலைகள் வழக்கு

# 'ட்ரயல் அட் பார்' மன்றுக்கு மூன்று நீதிபதிகள் நியமனம்

கொழும்பு,ஜூலை24

பொதுத்தேர்தலன்று உடத்தலவின்ன பகுதியில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தவிருக்கும் 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றுக்கு மூன்று நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்திருக்கின்றார்.

மேல் நீதிமன்ற நீதிபதி குமார் எக்கரத்ன தலைமையிலான இந்த நீதிமன்றத்தில் நீதிபதிகள் மக்ஸல் பரணகம, எஸ்கருணாரத்ன ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இந்த வழக்கில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, அவர்களது புதல்வர்களான லொகான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை ஆகியோர் உட்பட 15 சந்தேக நபர்களுக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்தில் 74 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கு சர்ச்சைக்குரியதாக இருப்பதால் இதனை ஜூரிமார்களைக் கொண்ட மேல் நீதிமன்றத்திற்குப் பதிலாக, மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' மன்றில் விசாரிக்க வேண்டும் என சட்டமா அதிபர் தீர்மானித்திருந்தார்.

அதனை ஏற்று 'ட்ரயல் அட் பார்' மன்றுக்கு மூன்று நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்திருக்கின்றார். அத்தோடு இந்த வழக்கை கொழும்பு மேல நீதிமன்றத்தில் நடத்தவும் அவர் முடிவு செய்திருக்கிறார். (ஐ)



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம்.

## காணிப் பகிர்வு குறித்து ஆராய

# அமைச்சர் ராஜித சேனரத்ன வன்னிக்குச் செல்வார்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள அரச காணிகளை மக்களுக்கு பகிர்ந்து வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக காணி அமைச்சர் ராஜித சேனரத்ன அங்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடத்திய நடமாடும் சேவையில் பங்குபெற்ற வந்த அவர் இத்தகவலை வெளியிட்டார்.

காணிப்பகிர்வு குறித்து ஆராய வனனிக்கு வருமாறு விடுதலைப் புலிகள்அழைப்பு விடுத்துள்ளனர் என்றும-

இந்த அழைப்பை ஏற்றுத்தாம் அங்கு செல்லவிருப்பதாகவும்- அவர் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற நடமாடும் சேவையில் தெரிவிக்கப்பட்ட பல முறைப்பாடுகளுக்கு உடன் தீர்வு காணப்பட்டது என்றும் அவர் கூறினார். (ஐ-3)

## சங்கிலி பறிப்பு!

சாவகச்சேரியிலிருந்து மட்டுவிலுக்கு நடந்து சென்ற பெண்மணியிடம் ஆள்கள் நடமாட்டமில்லாத பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த நபர் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி [illegible]வில் பகுதியில் இடம்பெற்றது. (ம-117)

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# படித்த இளைஞர், யுவதிகளுக்கு அபிவிருத்திப் பயிற்சித் திட்டம்

தென்மராட்சி,ஜூலை24

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த படித்த இளைஞர், யுவதிகளுக்கு அபிவிருத்தி தொடர்பான பயிற்சித் திட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், ஜி.சீ.ஈ. சாதாரண தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைப் பெற்றிருந்தால் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.(ம-117)

# நியூயோர்க் பேராசிரியர் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை24

நியூயோர்க் பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பேராசிரியர் அலெக்ஸ் பொறைன் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இங்கு வரும் அவர் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக புவியற்றுறை மண்டபத்தில் 'நீதி எதிர்கொள்ளும் சவாலும் சட்டத்தின் எல்லைகளும்' என்ற தலைப்பில் உரையாற்ற உள்ளார்.

பேராசிரியர் பொறைன் தென்னாபிரிக்க அரசியல் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தற்போது மாறிவரும் நீதிக்கான சர்வதேச நிலையத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

தென்னாபிரிக்காவில் ஏற்பட்டு வந்த அரசியல் மாற்றங்களுடனும் அரசியல் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு உடையவர் பேராசிரியர் பொறைன்.

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காக அவர் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## நிவாரணம் வழங்கப்படுகிறது

தென்மராட்சி,ஜூலை24

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான ஜூன் மாத நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பொருள்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ம-117)

# வெடிபொருள்கள் உள்ள பகுதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்க!

## தென்மராட்சி மக்களுக்கு படையினர் துண்டுப் பிரசுரம்

தென்மராட்சி,ஜூலை24

யாழ்.குடாநாட்டில் வெடிகுண்டுகளும் கண்ணிவெடிகளும் அகற்றப்படாத பகுதிகளில் நடமாடுவதை தவிர்க்குமாறு தென்மராட்சி மக்களுக்கு விசேட அறிவித்தலை, துண்டுப் பிரசுரங்களைப் படையினர் விநியோகித்து வருகின்றனர்.

துண்டுப் பிரசுரத்தில் உள்ள விவரம் வருமாறு:

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் யாழ்.குடாநாட்டில் புதைக்கப்பட்ட வெடிகுண்டுகளும் கண்ணி வெடிகளும் இன்றும், இராணுவத்தினரால் பரிசோதனை செய்யப்படாத இடங்களில் காணப்படுகின்றன.

இதனால் இராணுவத்தினரால் சோதனைகள் செய்யப்பட்டு அடையாளமிடப்பட்ட வீதிகள், இடங்கள், பிரதேசங்களில் மட்டும் நடமாட வேண்டும்.

வெடிபொருள்கள், வெடிகுண்டுகள், ஆயுதங்களைப பரிசோதிக்கவோ அவற்றைக் கையாளவோ முயற்சித்தால், அது வெடித்து உயிரிழப்புகளைச் சந்திக்கநேரிடும்.

வெடிபொருள்களினால் ஏற்படும் விபரீதம் குறித்து பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துங்கள் - என்றுள்ளது. (ம-117)

## 'டைனமைற்' வெடித்து கையில் படுகாயம்

கடலில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடிக்க பயன்படும் 'டைனமைற்' வெடியை பரீட்சித்துப் பார்த்த மீனவர் ஒருவர் அதுவெடித்ததினால் இருகைகளிலுமுள்ள விரல்கள் துண்டிக்கப்பட்டு பலத்த காயமடைந்தார்.

கற்பிட்டிப் பகுதியிலுள்ள கண்டல குழி என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.அந்தப் பகுதியைச் சேர்ந்த எம்.அமீன் என்பவரே இவ்விதம் பாதிக்கப்பட்டார்.

கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

கடலில் வழ்ந்து நனைந்துபோன டைனமைற்றைக் கையால் தேய்த்து சூடேற்றியபோதே அது வெடித்ததாகக் கூறப்படுகிறது. (ஐ)

# மாணவரை பாடசாலையில் சேர்க்க நிதி உதவி எவையும் பெறக்கூடாது

## கல்வி அமைச்சு செயலர் மூன்றாவது தடவையாக கடிதம்

அச்சுவேலி,ஜூலை24

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கும் மற்றும் தேவைகளுக்கும் நிதி உதவிகள் அன்பளிப்புக்கள் பெறுவதும், மாணவர்களுக்கு உடல் உள ரீதியான தண்டனைகள் வழங்குவதும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் - இவ்வாறு அமைச்சின் செயலாளர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதற்கும் பாடசாலைகளின் பல்வேறு தேவைகளுக்கும் நிதி [illegible]விடப்படுவதும் அன்பளிப்புக்கள் பெறுவதும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

மாணவர்களுக்கு ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற முறையில் உடல் உள ரீதியிலான தண்டனைகள் வழங்குவதும் நிறுத்தப்படவேண்டும்.

இவை மீறப்பட்டால் அது சட்ட விரோத நடவடிக்கையாகக் கருதப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி செயற்பாடுகள் தொடர்பாக வருடத் தொடக்கத்தில் அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு சுற்று நிருபங்களை மேற்கோள்காட்டி, வலியுறுத்தி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு இது குறித்து மூன்றாவது தடவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-11)

# வவுனியா வளாக விஞ்ஞான பிரிவு இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகும்

வவுனியா,ஜூலை24

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக விஞ்ஞானப்பிரிவு இன்று புதன்கிழமை முதல் மீண்டும் இயங்கவிருப்பதாக வளாக முதல்வர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட காணி அமைச்சர் ராஜித சேனரத்தினவுக்கும் மாணவர் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலை அடுத்தே விஞ்ஞானப்பிரிவு வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து விஞ்ஞான பிரிவு மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்ததும் -

கடந்த வெள்ளியன்று மாணவர்கள் வீதி மறியற்போராட்டத்தை மேற்கொண்டதை அடுத்து அவர்கள் வளாகத்துக்குள் பிரவேசிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்ததும் -

தெரிவித்ததே. (ம-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அன்னங்கை, உரும்பிராய் மேற்கு கோண்டாவிலைச் சேர்ந்த ம.லிங்கரூபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.822312080V), விசேட அடையாள அட்டை (இல. 0903025020) என்பன பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6304)

K.மாணிக்கம் என்பவரது டயறி ஒன்று மனோகரா தியேட்டர் சந்திக்கும் ஓட்டுமடம் சந்திக்குமிடையில முக்கிய ஆவணங்களுடன் தவறி விட்டது. கண்டெடுத்தோர் பொது முகாமையாளர், பனை, தென்னை கூட்டுறவுச் சங்கம், 330,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6303)

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை ஆனந்தம் என்பவரது தேசிய அடையாள அ.அ:(இல.551912205V), விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை என்பன பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரி யில் ஒப்படைத்து உதவவும். (6287)

காரைநகர், பலகாட்டைச் சேர்ந்த வைத்திலிங்கம் கோமளவல்லி என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.59607163V), கடற்படை அடையாள அட்டை (இல.008651), விசேட அடையாள அட்டை என்பன திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் கவருடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சக்கலாவோடை, காரைநகர் என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். (6315)

## அபூர்வ ஜோதிடம்

வடநாட்டை சிதத் மருந்தியலில் மரண அவஸ்தை தரும் நோய் இல்லா தொழிற்தோடும் அதிர்ஷ்டபலன் பெறல். சனி, ஞாயிறு 8.30 - 12.30 தொடர்பு: ஆடியபாதவீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (6311)

## விற்பனைக்கு

**Prima Broiler** குஞ்சுகள் (**Prima, Hijira, Greenvaley**), **Prima** சிவப்பு, வெள்ளை டேட்டுக் குஞ்சுகள் 25.07.2002 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். முதல் நாள் தடுப்பு மருந்து இலவசமாகத் தரப்படும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6091)

பல இனங்களில் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டர்கள், மீன் தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (6248)

3 பரப்புக் காணியுடன் வீடு வடலியடைப்பில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- க.அருந்தவராஜ், C/O க.தியாகராசா, வேம்படி முருகன கோயில் அருகல், தாவடி தெற்கு, கொக்குவில். (6231)

2பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.கந்தசாமி, மயிலு வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (6312)

நல்ல இன ஆண், பெண் பொமனோரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சீ.ஞானசேகரம் (ஆண்டவர்), சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. (6296)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (6322)

## வீடு தேவை

திருநெல்வேலிச் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பலாலி வீதியை அண்டிய பகுதியில் நிலத்துடன் கூடிய வீடு ஒன்று தொழில முயற்சிக்கு குத்தகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல.1578,மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (6321)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. கொள்வனவுகளுக்கு ஏற்ப விசேட விலைக்கழிவு வழங்கப்படும். தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம், முன் பாக, கட்டப்பிராய். (6261)

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து 1/2கிலோவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் முழுநிறை 1kg-150/-, தேறிய நிறை 240/-. தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரிக்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (6314)

**Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்கு தேவையான நிறையில் தினமும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6275)

## யாழ்.சிறைக்கு குழாய்க் கிணறு?

ஊர்காவற்றுறை,ஜூன்24

யாழ்.சிறைச்சாலைக்கு குழாய் கிணறு மூலம் குடிதண்ணீர் வசதி செய்துகொடுப்பதற்கு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனியன்று யாழ்ப்பாணம் வந்த அவர் யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் செய்ததாகவும் -

தமது செலவிலேயே கைதிகள் நலன்கருதி குழாய்க் கிணறை விரைவில் அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்ததாகவும் - கூறப்பட்டது.

நாரந்தனைப் படுகொலை வழக்குத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட அவர் இந்தச் சிறைச்சாலையிலேயே அடைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.

மூவ் பாம்




தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு

◄ மூட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து► வலிகளுக்குமான முழுமையான நிவாரணி

◄ இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

விநியோகஸ்த்தர்

பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559



LAMiCO

லெமினேடிங் முறைகளை தெரிவு செய்யுமுன் எங்களின் விலைகளை கவனியுங்கள்



புகைப்படங்களுக்கு 100% விகிதம் பாதுகாப்பு

- ஒரு பொத்தானை அழுத்தியவுடன் தானாய் வெப்பத்தை படச்சுருளின் வேகத்துக்கேற்றவாறு அமைத்துத் தரும்.
- 6 சூடாக்கப்பட்ட சிலிகோண் ரப்பர் ரோல்களின் மூலம் தரத்துக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம்.
- எழுத்துப் படிவங்களை திருப்பிப்போடும் சலுகை
- வேகத்தை ஏகவினால் இயக்கக்கூடியது. மற்றும் காகிதத்தின் கனத்தை கூட்டும் குறைக்கும் கருவியும் உண்டு.

உங்களின் பாதுகாப்புகளுக்கு உலக முன்னோடியுடன் இணையுங்கள்

நெஷானிஸ் (பிரைவேட்) லிமிட்டட்

25 1/1, கிருள வீதி கொழும்பு-05. தொ. பேசி. 590695, 502149, 074-511191

(தே. சே. வங்கியின் அருகில்) நாரஹேன்பிட்டி

வெப் தொடர்பு: http://www.bcity.com/neshanys


## இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY



BIRTHDAY

### செல்வன் தயாநிதி ஜெயகுமரன்

24.07.2002

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.திருமதி தயாநிதி ஜெயகுமாரி தம்பதியினரின் செல்வப்புதல்வன் ஜெயகுமரன்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (24.07.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, கோண்டாவிலில் இருக்கும் அப்பப்பா, மாமா, மாமி, அத்தான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*பத்திரகாளி கோயில் வீதி,*
*பருத்தித்துறை.* (5776)

தகவல்:
பொ.தயாநிதி (தந்தை)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 06 - 07 - 1914



உதிர்வு 24 - 06 - 2002

### அமரர் குழந்தைவேலு நடராசா

*(இளைப்பாறிய மேற்பார்வையாளர், புகையிரதத் திணைக்களம், கட்டடப்பகுதி)*

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிநிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். இன்று (24.07.2002) புதன்கிழமை நிகழவிருக்கும் அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*விநாயகர் வீதி,*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.* (6299)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா ஆசைப்பிள்ளை

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா ஆசைப்பிள்ளை, 22.07.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கரணவாய் தெற்கு காலஞ்சென்றவர்களான தம்பையா (செம்ப உடையார்), பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் நான்காவது மகளும் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பபிள்ளை ஆசைப்பிள்ளையின் மனைவியும்; சிவபாக்கியலட்சுமி, சிவலிங்கம் (R.D.D., திருகோணமலை), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முன்னாள் T.A., செங்கலடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர், தொழிற்றிணைக்களம்) மற்றும் பாக்கியம், பங்கையச்செல்வி ஆகியோரின் மாமியாரும், சுரேஸ்குமார் (கனடா), ஷகிலா (அமெரிக்கா - முன்னாள் ஆசிரியை, இரத்மலானை இந்துக் கல்லூரி), பிரேம்குமார் (R.D.D., திருகோணமலை), சாந்திக்குமார் (யாழ். பல்கலைக்கழகம்), ததீஸ்வரன் (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), சிறீகரன் (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), உமாறஜினி (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), நிஷாந்தி, கிரிஷாந்தி, சிவராஜ் (அமெரிக்கா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஹரன், திவ்வியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2002) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாமாளை,*
*சுழிபுரம்.* (6319)

தகவல்:
சிவலிங்கம் (மகன்).

# டிசெம்பர் 31க்கு முன் கணக்கு விவரம் அரச நிறுவனங்கள் வழங்கவேண்டும்

## அமைச்சர் கரு ஜயசூரிய பணிப்பு

டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் உள்ள சகல அரச நிறுவனங்களின் கணக்குகளையும் அரசுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இதில் எவ்வித அரசியல் தலையீடும் அனுமதிக்கப்படமாட்டாது. அரசியல் குறுக்கீடுகள் இருந்தால் உடனடியாக அறிவிக்கவேண்டும்.

- இவ்வாறு மின்சக்தி, எரிபொருள அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற "பொதுமுயற்சிகளிலான ஆளுமையை முன்னேற்றுவது" எனும் தொனிப்பொருளில் நாட்டில் உள்ள சகல அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் கலந்துகொண்ட கருத்தரங்கில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று அரசாங்கத்தின் சொத்துகள் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில் உள்ளன. இவைகளை மீளக்கட்டியமைப்பதற்கு அரசு பெருந்தொகையான பணத்தையும், சக்தியையும் விரயமாக்கவேண்டியுள்ளது.

அரச நிறுவனங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் எமது அரசின் தலையீடுகள் ஒருபோதும் இருக்காது. சுதந்திரமாகச் செயற்பட நாம் பூரண ஒத்துழைப்பை நல்குவோம்.

கடந்தகாலங்களில் மக்களின் சொத்து, கண்மூடித்தனமாக வீணாக்கப்பட்டுள்ளது. இவைகளைக் கண்டறிய சகல அரச நிறுவனங்களினதும் ஆதரவு எமக்குத் தேவை. நிறுவனங்களின் தலைவர்கள், ஊழல்களை வெளிப்படுத்தத் தயங்கக்கூடாது. குறுக்கீடுகள் ஏற்படுமாயின் அரசுக்கு உடனடியாக அறிவிக்கவேண்டும். அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால் பாதுகாப்பு வழங்குவோம்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சிகண்டுள்ள நாட்டை கட்டியெழுப்ப சகலரும் முன்வரவேண்டும். 2001ஆம் ஆண்டுக்கான அரச நிறுவனங்களின் கணக்குகள் இதுவரைக்கும் சமர்ப்பிக்கப்படவில்லை. இனிஒருபோதும் அரசியல் தலையீடுகளுக்கு இடம்கொடுககமாட்டோம். தலையீடுகள் இருப்பின் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிறந்த தலைமைத்துவங்களின் கீழ் ஊழல்களற்ற அரச நிறுவனங்கள் இயங்கவேண்டும் என்பதே இன்றைய அரசின் நோக்கமாகும். நாட்டை முன்னேற்ற சகலரும் ஒத்துழைக்க வேண்டும் -

இவ்வாறு அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணகர்த்தாக்கள் தம்மை இனங்காட்டிக்கொள்ளவும் பொறுப்பேற்கவும் தயாரில்லை. நாட்டில் ஏற்பட்டிருக்கும் 1,541 பில்லியன் ரூபா கடன்களை இன்றைய அரசு தனது தலையில் சுமந்துள்ளது.

இலாபமீட்டக்கூடிய ஸ்ரீலங்கா ரெலிகொம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார திணைக்களம், ச.தொ.ச., ஸ்ரீலங்கன் விமானநிறுவனம் போன்றவற்றுக்குக்கூட அரசின் நிதிகளைச் செலுத்தவேண்டிய மோசமான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார்மயப்படுத்தலின் மூலம் பொருளாதார வீழ்ச்சியையும் கட்டுப்படுத்துவதோடு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கமுடியும்.

சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு தனியார்மயப்படுத்தல் முக்கியத்துவம் பெறுகிறது. அரசின் பூரணகட்டுப்பாட்டின் கீழ் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

எமது பொருளாதார வீழ்ச்சியையும், அரசியல் சாணக்கியமின்மையையும் மூன்றாவது நாடொன்று சுட்டிக்காட்டும் அளவிற்கு எமது நிலை மோசமாக உள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சகலமட்டங்களிலும் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். ஸ்தீரமான பொருளாதாரமும் பலம்வாய்நத அரசும் இருக்கும்பட்சத்தில் வெளிநாட்டவர்கள் எமது குறைகளைச் சுட்டிக் காட்டமாட்டார்கள்.

உலகவங்கியும் எமது ஒவ்வொரு நகர்வையும் அவதானிக்க அதன் பிரதிநிதிகளை அனுப்பிவைத்துள்ளது. எனவே, அரச நிறுவனங்களைச் சார்நத நிர்வாகிகளாகிய நீங்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

இக்கருத்தரங்கில் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, கனகசபாபதி, பொதுநிதியசபை இயக்குநர் எம்.வி.பி.சில்வா, பொதுநிதியசபை உதவிஇயக்குநர் எஸ்.பி.திவாரத்ன, திறைசேரியின் உதவிச்செயலாளர், கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சி.மாயாதுன்ன ஆகியோர கலந்துகொண்டனர்.

### குளோனிங்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடும்.

இந்த குளோனிங் குழந்தையின் பெற்றோர் குறித்த செய்தியை அன்ரிநோறி வெளியிடவில்லை.

இந்த முதலாவது குளோனிங் குழந்தை உடல் ரீதியான குறைபாடுகளுடன் பிறப்பதற்கு சாத்தியங்கள் அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# ஆசிரிய நியமனங்கள் குறித்து கூடிய கவனம்

## கல்வி அமைச்சின் குழு உதவிச் செயலாளர் தெரிவிப்பு

கல்முனை,ஜூலை24

தற்போது நாடு முழுவதும் ஒன்பதாயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் இருந்து வருகின்றன. இவற்றை இயன்றவரை நிரப்புவதற்குக் கூடுதலான கவனம் செலுத்தப்படும் என்று கல்வி அமைச்சின் கல்விச் சேவைகள் குழு உதவிச் செயலாளர் எம்.எச்.எம்.ஸமீல் தெரிவித்தார்.

திறைசேரியின் அனுமதி கிடைத்ததும் இந்த ஆசிரிய வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டும் குறித்தளவு எண்ணிக்கையிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாகாணத்தில் மூவாயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் இருந்தும் ஆயிரத்துக்கும் குறைந்த ஆசிரிய நியமனங்களே தற்போது வழங்க முடியுமாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

இது தவிர தேசிய கல்விக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 1992 டிப்ளோமாதாரிகளுக்கு முதற்கட்டமாக ஆசிரிய நியமனம் வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம)

### கலந்துரையாடல்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கல் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும்.

அனைத்து அதிபர்கள், கல்விப் பணிப்பாளர் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஜ-100)


### விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

சுன்னாகம் மதவடி லேன் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காலில் காயமடைந்துள்ளார்.

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த பரமநாதன் சச்சிதானந்தம் என்பவரே காலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-8-15)

## 31ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர்
### நாகலிங்கம் சோமசுந்தரம்

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 17 - 09 - 1922 | 24 - 06 - 2002 |

அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழ்ந்தீர்!
ஆதரவாய் அரவணைத்து எமை நீர் வளர்த்தீர்!
இன்றோடு முப்பத்தொரு நாள் ஆனாலும் எங்கள்
இதயத்தில் உம் நினைவு நிறைந்தே இருக்கும்!
கனிவான பேச்சும் புன்சிரிப்பும் இனிக் காண்பதெப்போது? நாம்
எப்போதும் உம் நினைவால் இப்புவியில் வாழ்கின்றோம்
நீங்கள் மறைந்தாலும் உங்கள் இலட்சியங்கள் என்றும்
உலகில் நிறைந்து நிலைத்திருக்கும்!

இன்று (24.07.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*63, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி.*

தகவல்:
சோ.சதானந்தன்
(ஈசன் மொத்த விற்பனையாளர்) (6335)

## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி

உடுவில் தெற்கு, பாலாவோடையைச் சேர்ந்த திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி நேற்று (23.07.02) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு அவர்களின் அன்புத் துணைவியாரும், துரைசிங்கம், பாலசிங்கம், புஸ்பகாந்தி, இரட்ணசிங்கம், காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் சகோதரியும், கலைவாணி, இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்களான சுகுமாரன், கலையரசி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சச்சிதானந்தம், நகுலேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், ஜெயநிதியின் பெரியதாயாரும், பிரணவி, ஸ்ரீசண்முகி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.02)புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை.*

(6334)

தகவல்:
சுகுமாரன் (மகன்)


## அற்லஸ் கொமினிக்கேசன் பஸ் ஆசனப் பதிவகம்



77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

*ஐந்துலாம்புச் சந்தி, கொழும்பு.*

யாழ்.- கொழும்பு, கொழும்பு - யாழ்.பிரயாணம் செய்ய குளிரூட்டப்பட்ட பெரிய சொகுசு பஸ் சேவை ஆரம்பமாகிவிட்டது. அத்துடன் தனியாகப் பயணம்செய்ய எமது நிறுவனத்தில் குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சிறிய வாடகை வாகனம் திருமணத்திற்கு, சுற்றுலாவிற்கு, கோவில் தரிசனம் செல்ல மற்றும் தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

*தொ.பே.இல. 021 - 2990*

*எமது நிறுவனத்தின் சேவைகள்:*

1. தொலைபேசி: வெளிநாட்டு, உள்நாட்டு வசதி, பக்ஸ் வசதி
2. தங்குமிட வசதி (சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்) யாழ்., கொழும்பில்.
3. உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் விரைவாக அனுப்புதல்.
4. பயணிகள் நலன்கருதி பின்வரும் இடங்களில் பதிவுகள் செய்து கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குகன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | யாழ். பஸ் நிலையம் முன்பாக, 388A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| இந்திரன் கொமினிக்கேசன், கொடிகாமம். | கஜன் தொலைத் தொடர்பகம், திருநெல்வேலி. |
| தர்மகத்தா சபை காரியாலயம், ஆஞ்சநேயர் ஆலயம், மருதனார்மடம். | கல்யாணி பன்சிகவுஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |

*மு.கு:* சொகுசு பஸ் புறப்படும் நேரம்: யாழ்.நகரில் இருந்து 6.30மணிக்கு புறப்பட்டு ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு (6.45மணி) சென்று கோப்பாய் வழியாக கைதடியால் செல்லும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தொடர்பு கொள்ள:



அற்லஸ் கொமினிக்கேசன்,
77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.: 2990, 2557.

(6333)

# சாவகச்சேரி சந்தையில் பொருள்களின் விலை அதிகம்

தென்மராட்சி,ஜுலை24

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு உற்பத்தியாளர்கள் மற்றும் வெளியூர வியாபாரிகள் ஆகியோர் குறைந்த அளவே வருகை தருவதால் சந்தையில் பொருள்களின் விலை ஏனைய சந்தைகளைவிட அதிகரித்துக் காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரிப் பகுதியில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால் சந்தைக்கு வருவோரின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்துள்ளது. எனினும், இங்கு மரக்கறி மிகக் குறைந்தளவே விற்பனைக்கு வருவதால் தற்போது வியாபாரத்தை மேற்கொண்டுள்ளோர் நினைத்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதாகவும், இதனால் பொதுமக்கள் வேறு சந்தைகளுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் சாவகச்சேரி சந்தையிலிருந்தே ஏனைய சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்கள் கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது. (ம-117)

# வீடு இடித்துத் தரைமட்டம்

சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு முன்பாக உள்ள வீடொன்று புல்டோசரினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டின் உரிமையாளர் இந்த வீட்டினைத் திருத்தி மீளக்குடியமர்வதற்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தவேளையில் கடந்த 11ஆம் திகதி வீடு புல்டோசரினால் இடித்துத் தகர்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இந்த வீட்டின் உரிமையாளர் கடந்த மாதம் வன்னியிலிருந்து சாவகச்சேரிக்கு வந்ததாகவும், வீட்டின் கூரைகள் அகற்றப்பட்டு கட்டடங்கள் மட்டும் காணப்பட்டதால் வீட்டினைத் திருத்துவதற்கு ஆயத்தங்கள் மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)


## ஸ்ரூடியோ கடைப்பொருள்கள் விற்பனைக்கு உண்டு

சுன்னாகம், **நியூ சித்திரகலா ஸ்ரூடியோ** பாவனையில் இருந்த அத்தனை பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்ந்தும் அதே இடத்திலேயே நடத்தக் கூடியதாக செய்துகொள்ளவும் முடியும்.

விவரங்களுக்கு நேரில் வரவும்.

*104, கே.கே.எஸ். வீதி,* - **உரிமையாளர்.**
*(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)*
*சுன்னாகம்.* (6327)


## சிற்றூர்தி சேவைச் சங்கம், வடமராட்சி

# அறிவித்தல்

**21.07.2002ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைய, 1993ஆம் ஆண்டு தொடக்கம் 1995ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், சங்கப் பதிவுகள் உள்ளவர்கள் மட்டும், எதிர்வரும் 25.08.2002இற்கு முன் விண்ணப்பித்து சிற்றூர்திகளைப் பதிவுசெய்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் பழைய பதிவுகள் யாவும் ரத்து செய்யப்படும் என்பதை இத்தால் யாவருக்கும் அறியத்தருகிறோம்.**

**சோ.செல்வராஜா**
**செயலாளர்.**

**சு.சில்வஸ்ரர்**
**தலைவர்.**

(6326)

## Quotations from the licensed Surveyors

**Contract No. 1**

On Kandy - Jaffna (A 009) Road, 194.0-199.0Km. and 202.0-228.0Km.

**Contract No. 2**

On Kandy - Jaffna (A 009) Road, 228.0 - 257.0Km.

**Contract No. 3**


On Kandy - Jaffna (A 009) Road, 257.0 - 290.0Km.

**Provincial Director/NE(N)'s Office,**
**Road Development Authority, Jaffna.**

Quotations are invited for the following Surveying of LS & CS by the Provincial Director/N-E(N)'s Office, Road Development Authority, Jaffna on the above three Contracts. Quotations will be accepted up to 1500 hrs on 27th July 2002 and opened immediately thereafter at this office.

**Scope of work**

01. The establishment of centreline of the existing carriageway at 20m interval and to be marked clearly.
02. Establishment of TBM at the interval of 500m and concreting for that.
03. The Reduced level (MSL) of LS at the intervals of 20m at the above marked centreline and the CS for that, The detail of the cross section to be taken is given below.




*Existing Cross-section detail to be taken*

**Eng.V.Tharmakulasingham**
*Provincial Director/NE(N),*
*R.D.A. Jaffna.*

(C/23038)

# தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை24

ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் இன்று மாலை 7 மணிக்கு ஐந்தாம் நாள் நிகழ்வாக மெற்றாஸ் பிரம்மஸ்ரீ சோ. உமாரமண சர்மாவின் இசை அரங்கு இடம்பெறும்.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.சிவசாமியும் சிறப்பு விருந்தினராக பதில் நீதிவானும் சட்டத்தரணியுமான க.கேசவனும் கலந்துகொள்வர். (ம)

# மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜுலை24

குடாநாட்டின் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்த பெண்கள் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை, முதலி கோயிலடியைச் சேர்ந்த வடிவேல் விக்னேஸ்வரி (வயது 20) என்பவர் தமது வீட்டின் முன்பு இடம்பெற்ற சண்டையைப் பார்க்கச் சென்ற வேளையில் அங்கு யாரோ தாக்கியதில் இடுப்புப் பகுதியில் காயமடைந்த நிலையில் நேற்றும் -

நவாலி வடக்கைச் சேர்ந்த வரதராசா சசிகலா (வயது 31) என்பவர் தனது சகோதரியைக் கண்டித்ததால் அவரின் கத்தி வெட்டுக்கிலக்காகி தலையில் படுகாயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினமும் -

அளவெட்டி, களநகரைச் சேர்ந்த முருகானந்தம் கலாவதி (வயது 27) என்பவர் கணவனால் கத்திப் பிடித் தாக்குதலுக்குள்ளாகி நெற்றிப் பகுதியில் காயமடைந்த நிலையில் நேற்றும் -

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-10-8-15)

# மாநகர சபை அலுவலகம் சொந்த இடத்தில் அமையவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜுலை24

யாழ்.மாநகர சபையின் அலுவலகம் ஏற்கனவே இருந்த அதன் சொந்த இடத்திலேயே மீண்டும் அமையவேண்டும் என்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினருமான எஸ்.மரியதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் 15 வட்டாரங்களையும் நல்லூரின் 8 வட்டாரங்களையும் உள்ளடக்கிய மாநகர சபையின் செயற்பாடுகள் யாவும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையில் மீண்டும் அதன் சொந்த இடத்திலேயே அலுவலகம் அமைவது மிகப் பொருத்தமாக இருக்கும் எனவும் அதற்குரிய நடவடிக்கையை மாநகர சபை முதல்வர் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (ம-10)

# ஆன்மீக விருத்தி நிகழ்வு!

யாழ்ப்பாணம்,ஜுலை24

ஆன்மீக விருத்திக்கான நிகழ்ச்சி ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை, தாதிய பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆன்மீக விருத்தியை விரும்பும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்ச்சித தலைவரால் கேட்கப்பட்டுள்ளது. (ம-15)

# அமைச்சுக்குழு ஆஸ்பத்திரிக்கு சனியன்று விஜயம்

யாழ்ப்பாணத்திற்கு எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளும் சுகாதார அமைச்சின் செயலாளர் தலைமையிலானகுழு அன்றையதினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகளை நேரில் பார்வையிடவுள்ளது.

வைத்தியசாலையின் சகல பிரிவுகளுக்கும், வார்ட்டுகளுக்கும் விஜயம செய்யும் இக்குழு அவற்றில் இருக்கும் குறைபாடுகளை நேரில் பார்த்து அதற்கான நிவர்த்திகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் இந்த அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் அவர்கள் வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தவுள்ளனர். (ம-15)


## கணனிகள் விற்பனைக்கு
## Computers for Sale

ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள் விற்பனைக்கு உண்டு. கணனியின் மிகக் குறைந்த விலை 24,500/= ஆகும். 27.07.2002ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

***B.Sureskumar***
***'Poompolil', 1201, K.K.S. Road,***
***Narchimar Kovilady,***
***Jaffna.***

***B.Sureskumar***
***Black Road,***
***Chankanai.***

(6331)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியர்

## திரு.ஆ.கனகரத்தினம்

அவர்கள் எமது மாதகல் கிராமத்தில் உள்ள காஞ்சிபுரம் ஸ்ரீநரசிம்ம/வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தின்போது. 18.06.2002 தொடக்கம் 28.06.2002 வரை பத்து நாள்களுக்கு **'மெய்யடியார்கள் வரலாறு'** என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தமைக்காக பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றோம். இவர் எல்லா நலன்களும் பெற்று நீடூழிகாலம் வாழ்ந்து எமது சமயத்திற்கு மேலும் அரும்பணி செய்ய அருள வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*காஞ்சி வைரவர் கோயில்,* **ஆலய நிர்வாக சபையினர்.**
*மாதகல்.* (6332)

## தசாக, கிருகயஜ்ஞ அழைப்பு

அன்புடையீர்,

கடந்த 16.07.2002 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

***பிரம்மஸ்ரீ*** **நடேசக்குருக்கள் இராமச்சந்திர சர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| **25.07.2002** | வியாழக்கிழமை **தசாகம்** பகல் 10.00 மணி |
| **26.07.2002** | வெள்ளிக்கிழமை **ஏகோதிஷ்டம், மாசிகம்** |
| **27.07.2002** | சனிக்கிழமை **சபிண்டீகரணம்** |
| **28.07.2002** | ஞாயிற்றுக்கிழமை **கிருகயஜ்ஞம்** (மதியபோசனம்) பகல் 12.00 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி சிவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*23, விதானையார் வீதி,* **- மனைவி, பிள்ளைகள்.**
*கொழும்புத்துறை.* (6324)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபரின் அன்புத் தந்தையார்

## அமிர்தலிங்கம் துரைசிங்கம்

(எழுதுமட்டுவாழ்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நலன்புரிக் கழகம்,**
*யாழ்ப்பாணம்.* (6325) **யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்

### கேதீஸ்வரநாதன் குமாரசாமி (சூரியா)

நல்லூர், வைமன் வீதி, கருப்பக்கொல்லையைச் சேர்ந்த கேதீஸ்வரநாதன் குமாரசாமி அவர்கள் நேற்று (23.07.2002) செவ்வாய்க்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரநாதன் - கமலாம்பிகை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - ஜெயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாம்பிகையின் அன்புக்கணவரும் பிரஷாந்தி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி) அவர்களின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்ற ஸ்ரீதேவி மற்றும் கலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை), மகேந்திரன் (கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் *18/17,* வைமன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (24.07.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/17, வைமன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
திருமதி கு.பாலாம்பிகை (மனைவி)

(6316)

# தேவையேற்பட்டால் டிசெம்பரில் தேர்தல்!

## அமைச்சர் திஸநாயக்கா கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை24

எம்.பிக்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி மனச்சாட்சிப்படி நாடாளுமன் றத்தில் வாக்களிப்பதற்கு வழிசெய் யும் சட்டமூலத்தையும், நிறைவேறு அதிகார ஜனாதிபதியின் அதிகாரங் களைக் குறைக்கும் சட்ட மூலத்தை யும் உரிய பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிக்கும். அதில் வெற்றி யீட்ட முடியாவிட்டல் வரும் டிசெம் பரில் நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கு எமது அரசு வழி செய்யும்.

இப்படிக் கூறியிருக்கின்றார் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநா யக்கா.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் உரை யாற்றும் போதே அவர் இப்படிக் கூறி னார்.

"டிசெம்பருக்குப் பின்னர் மற் றொரு பொதுத் தேர்தல் நடத்தப்பட் டால் ஐக்கிய தேசிய முன்னணிக்கு நாடாளுமன்றில் மேலும் இருபது ஆச னங்கள் கூடுதலாகக் கிடைக்கும்.

அதன் மூலம் அரசமைப்பைத் திருத்துவதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளு மன்றில் பெற்றுக்கொள்வோம். அதைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் அதி காரத்தைப் பறிக்கும் சட்டங்கள் உட் படத் தேவையான சட்டங்கள் அனைத் தும் நிறைவேற்றப்படும்.

- இப்படி மேலும் கூறினார் அமைச சர் திஸநாயக்கா.

(ஐ)

## நிக்கவரட்டிய மக்கள் வங்கிக் கிளையில்

# 2காவலர்கள் வெட்டிக்கொலை! கொள்ளை முயற்சி தோல்வி!!

கொழும்பு,ஜூலை24

நிக்கவரட்டிய பகுதியிலுள்ள கிரிபாவ என்னுமிடத்திலுள்ள மக் கள் வங்கிக் கிளையை நேற்று முன தினம் இரவு 1.00மணியளவில் கொள்ளையிடச் சென்ற குழுவொன்று அங்கிருந்த இரண்டு காவலர்களை யும் கத்தியால் வெட்டிக் கொலை செய் தது. ஆனால் கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது.

கமநல சேவைக் கட்டடத்தில் அமைந்திருந்த வங்கியினுள் நுழைநத கொள்ளையர் பாதுகாப்பு பெட்ட கத்தை தேடினர். எதிர்ப்பட்ட காவ லரை தொண்டையில் வெட்டினர். பாதுகாப்பு பெட்டகம் அவர்கள் கையில் அகப்பட்டதாயினும் அதனை அவர்களால் திறக்க முடியவில்லை என்று நிக்கவரட்டிய பொலீஸார் தெரிவித்தனர்.

இதுவரை கொள்ளையர்கள் கைது செய்யப்படவில்லை. (ஐ)

# சட்டக் கருத்தரங்கு

'பயங்கரவாதச் சட்டத்தை ரத் துச் செய்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று அடுத்த மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கும் முன் னேற்றத்திற்குமான நிலையம் (கொழும்பு) யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நதி சமாதான ஆணைக்குழு வுடன் இணைந்து இக்கருத்தரங்கினை நடத்தவுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்த நிபு ணர்கள் பலர் கருத்தரங்கில் உரை யாற்றவுள்ளனர். தமிழிலும், ஆங்கி லத்திலும் உரைகள் இடம்பெறும்.

தனிநபர்களும், நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வலர்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெறு மாறு நீதி சமாதான ஆணைக்குழு வின் தலைவர் வண.பிதா ஏ.ஐ. பேணாட் கேட்டிருக்கிறார்.

தமது அங்கத்தவர்கள் எத்தனை பேர் கலந்துகொள்வர் என்ற விவ ரத்தை நிறுவனங்கள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமைக்கு முன் பாக 'தலைவர், நீதி சமாதான ஆணைக் குழு, நல்லாயன் நிலையம், யாழ். பல்கலைக்கழக ஒழுங்கை, திரு நெல்வேலி' என்ற முகவரியில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (ஐ)

# அமைச்சர்கள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படிச் செய்யமுடியாது.

பௌத்த தர்மத்தில் போதிக்கப்பட டவை இப்போது இல்லை என்று எண் ணிக்கொண்டு நாம் செயற்படுவோம்.

ஒருவர் எம்மைக் கொலைசெயய வரும்போது கொலைசெய்துவிட்டுப்போ என்று நாம் தூங்கிக்கொண்டு இருக்க மாட்டோம்.

நேரடியாகக் கொலைசெய்ய வந் தால் அவன் கழுத்தைப் பிடிப்போம்.

மறைந்திருந்து குண்டுத் தாக்கு தல் நடத்தினால் அதற்கு எம்மால் முகங்கொடுக்கமுடியாமல் போகும்.

நிதியமைச்சில் யாரிருக்கிறார்? அந்த வயதான சொக்ஸி என்ற சட் டத்தரணி இருக்கின்றார். அவருக்கு ஒன்றும் தெரியாது.

நிதி அமைச்சுக்குச் சென்று இரண்டு மணித்தியாலம் கதவைப் பூட்டிக் கொண்டு அமர்ந்துவிடுவார். யாரை யும் சந்திக்கமாட்டாராம்.

அன்று வாகனங்கள் தொடர்பாக அவர் கதைக்கவந்தபோது நான் நன் றாகக் கொடுத்தேன். 'உம்' மென்று மௌனமாகச் சென்றுவிட்டார். நான் பாவம் என்று பரிதாபப்பட்டேன்.

கல் பீரிஸோ, ஜி.எல்.பீரிஸோ என்று ஒருவர் இருக்கிறார். அவர் இருந் திருந்து ஒவ்வொரு கதையைக் கூறு வார். எனக்கும் கேட்குமாறு சத்தமாகக கூறுங்கள் என்று நான் தெரிவித்தேன்.

பின்னர் நான் நன்றாகக் கொடுத் தேன். அந்த மனிதருக்கு மாரடைப்பு வந்துவிடுமோ என்று நான் பயந்து விட்டேன்.

ரவி கருணாநாயக்கவின் பாட்டனா ரான 'ஜங்கிள்' திஸாநாயக்கா - அப்படியென்றால் காட்டு திஸாநாயக்கா - எந்தநேரமும் குடிபோதையில்தான் இருப்பார். அதனால்தான் அவரை அப்படி அழைக்கின்றார்கள். அரசு விரோத சூழ்ச்சிசெய்து எனது தாயா ரைக் கொல்வதற்கு முயற்சிசெய்த வரும் அவர்தான்.

இன்று அவரது மகளின் மகன் தனது பரம்பரையைப்போல நாமும் கொலை செய்வோம் என்று நினைக் கின்றார்.

இப்படியானவர்...... நான் ஒரு போதும் அமைச்சரவைக்கு எடுக்க வில்லை. அவர்களுடன் ஒன்றாக அமர்ந் திருக்கவில்லை.

நான்கு தொலைக்காட்சிகளையும் இவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டனர்.

ஒன்று ரணிலின் அண்ணனுடை யது. அதற்குப்பெற்ற 15 கோடி ரூபாவை ரணில் பிரதமரான காலத் தில் மீண்டும் செலுத்தப்படவில்லை.

மகாராஜாவின் எம்.ரி.வி. என்று ஒன்று இருக்கிறது. இம்முறை ஐ.தே.கட் சியை அதிகாரத்துக்குக் கொண்டுவரு வதற்கு செலவுசெய்தவர்களில் இவர் களே பிரதானமானவர்கள். எமது அமைச்சர்கள் சிலரைப் பணம்கொடுதது வாங்கவும் இவர்களே முன்னின்றார் கள். இன்று மகாராஜா நிறுவனத்தின பணிப்பாளர் ஒருவர் ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர்.

- இப்படி ஜனாதிபதி கூறினார். (ஐ)

# களுத்துறைச் சிறைக் கைதிகள் பலரின் உடல்நிலைமை மோசம்!

கொழும்பு,ஜூலை24

களுத்துறை சிறையில் தொடர் ந்து இன்றுடன் ஆறாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளில் சிலர் மயக்கமுற்றுள் ளனர். அவர்களின் உடல்நிலை மோச மாக இருப்பதாகத் தெரியவருகின் றது.

இவர்களுக்கு வைத்திய சிகிச்சை வழங்க சிறைச்சாலை நிர்வாகம் முயன்றபோதும் அதற்கு இணங்கு வதற்கு உண்ணாவிரதிகள் மறுத்து விட்டனர் என்று சிறைச்சாலை ஆணை யாளர் சந்திரசேன தெரிவித்தார். நேற்றுமுன்தினம்வரை 45 கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். நேற்று மேலும் இரு இளைஞர்கள் உண்ணா விரதத்தில் இணைந்தனர். வெயி லில் காய்ந்து, மழையில் நனைந் தபடி கடந்த ஐந்து நாள்களாக - இரவு, பகலாக சிறையின் கூரையில் அமர்ந்திருக்கும் இளைஞர்களில் பலர் பலவீனமடைந்து தளர்ந்துபோயி ருப்பதாகவும் எனினும் மனவுறுதி யோடு அவர்கள் காணப்படுவதாக வும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 201 தமிழ்க் கைதி களில் நேற்றுமுன்தினம் மூவர் விடு விக்கப்பட்டனர். அன்டன் மரினோ, முருகேசு முருகவேல், இராமையா விஜயகிருஷ்ணன் ஆகிய மூன்று இளைஞர்களே விடுவிக்கப்பட்டனர். (ஐ-9)

# மட்டக்களப்பு சிறையிலும் சாதும்வரை உண்ணாவிரதம்!

செங்கலடி,ஜூலை24

மட்டக்களப்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 29 அரசியல் கைதிகளும் சாகும்வரையான உண் ணாவிரதத்தில் நேற்றுக் குதித்தனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் தின் கீழ் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள 27 கைதிகளும் தண் டனை விதிக்கப்பட்ட கைதிகளுமே நேற்று இந்தப் போராட்டத்தில் குதித் தனர்.

விடுதலை விவகாரத்தில் தாங் கள் தொடர்ந்து ஏமாற்றப்படுவதாகத் தெரிவித்து, தங்களை விடுவிக் கும் படி கோரியே இவர்கள் இந்தப் போராட் டத்தில் குதித்துள்ளனர். (ஐ-9)

# கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியாவில் உண்ணாவிரதம்!

வவுனியா,ஜூலை24

வவுனியாவில் தமிழர் கூட்டமைப்பு நேற்று ஏற்பாடுசெய்திருந்த உண்ணா விரதப் போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கில் மக்கள் ஒன்றுதிரண்டுவநது பங்குபற்றினர்.

கறுப்பு ஜூலை தினத்தை நினைவு படுத்தியும் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய் யக் கோரியும், விடுதலைக்காக அவர் கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட் டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழ கத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ம.தி. மு.க. பொதுச்செயலாளர் வைகோவை விடுவிக்கக்கோரியுமே வவுனியா நகர சபை மைதானத்தில் இந்த உண்ணா விரதம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களான இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். ரவிராஜ், சிவசக்தி ஆனந்தன், வீ.ஆனந் தசங்கரி, ராஜா குகனேஸ்வரன், சிவா ஜிலிங்கம், ஜோசப் பரராஜசிங்கம் மற் றும் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, யாழ்.மாநகரசபை உறுப்பினர் அரவிந் தன் ஆகியோரும் உண்ணாவிரதத் தில் கலந்துகொண்டனர். (ஐ)

## நேர்காணல் ஒளிபரப்பு

ரூபவாஹினி தொலைக்காட்சி யில் 'படிமங்கள்' நிகழ்ச்சியில் இன்று இரவு 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங் கனுடனான நேர்காணல் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது. (ஐ-9)

## புதுக்குடியிருப்பில் சிறுகதைத்தொகுதி அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை24

இணுவையூர் சிதம்பரதிருச்செந்தி நாதனின் 'மணல்வெளி அரங்கு' சிறுகதைத் தொகுதி அறிமுக அரங் கும் 'நாம் வாழ' நாடக அரங்கும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித் தியாசாலையில் நடைபெறவுள்ளன.

சிறுகதைத் தொகுதி அறிமுக உரையை க.வே.பாலகுமாரனும் ஆய்வுரையை யோ.செ.யோகியும் வழங்குவர்.

இ.பரா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். ஈகச்சுடரை பொன். தியா கம் ஏற்றுவார். (ஐ)


நிறைஞ்சனாஸ் சங்கானை
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-22944)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C/22943)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கபாலி, விவேக் நடித்த
மனதைத் (திருடி) திருடிவிட்டாய்
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே)
26ஆம் திகதிமுதல்
புன்னகைதேசம்
(6297)


# நெஞ்சுருகும் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம் 1919 • 03 • 07

மறைவு 2002 • 06 • 17

## வெ.சு.கனகரத்தினம்

(இளைப்பாறிய பிரதம கணக்காளர், கொழும்பு கொமர்ஷல் கம்பனி)

அராலி கிழக்கு, தோம்பூரைப் பிறப்பிடமாகவும், 7ஆம் மைல் சண்டி லிப்பாய் 'வசந்த வாசம்', இல.67 பெல்மண்ட் வீதி, கொழும்பு 12 ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட, வெ.சு.கனகரத்தினம் (சின்னராசு) 17.06.2002 இல் காலமானார். அன்னார் அராலி கிழக்கு காலஞ்சென்ற சுப்பையா - சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், சண்டிலிப்பாய் சிவஞான கிப்பிள்ளையின் (மங்கையர்க்கரசி) அன்புக் கணவரும், ஓவசியர் முத் தையா - இரத்தினம்மாளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கோப் பாய் மீனாட்சிப்பிள்ளை, சங்குவேலி செல்லக்கண்ணு, நல்லூர் நடராசா, சிவராசா (மாம்பழம்) ஆகியோரின் சகோதரனும், வசந்தகௌரி (கொழும்பு), ஸ்ரீதரன் (அவுஸ்திரேலியா), சிவகௌரி (அபுதாபி), ஜெயகௌரி (ஓமான்), ஸ்கந்தகுமார் (சிங்கப்பூர்) ஆகியோரின் தந்தையும், விமலேந்திரன் (யுனி ஆர்ட்ஸ் நிறுவனம்), வரலக்ஷ்மி (அவுஸ்திரேலியா), ஸ்ரீதாசன் (அபுதாபி), அருந்தவராஜா (ஓமான்), சுகந்தி (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும், லாவண்யா, அருண்ணியா, இலக்ஷிணியா, வெங்கடேஷ், சௌமியா, சரண்யா, சிவாகினி, லபீஷன், அபிராமி, தக்ஷாயிணி, கௌசல்யா ஆகி யோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 17.07.2002 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. என்பதை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கி றோம். அன்னாரின் மரணச் செய்தி அறிந்து துக்கம் தெரிவித்த அனைதது நெஞ்சங்களுக்கும் எங்கள் நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*67, பெல்மண்ட் வீதி,*
*கொழும்பு - 12.*

தகவல்:
அருந்தவராஜா ஜெயகௌரி (மகள்)

(6337)


அறிவொளி NALLUR
A/L - 02 CHEMISTRY
திரு.டயஸ்
அலகு ரீதியான வினாவிடை மீட்டல்
ஆரம்பம்:26.07.2002 Fri.4.30p.m.
வகுப்புகள்: Sat., Sun. 2.30p.m.
A/L-03 COM.MATHS
B.ரவீந்திரன் B.Sc.
விசை, வேலை, சக்தி
ஆரம்பம்: 28.07.02 4p.m.
(6320)

கடை வாடகைக்கு
பருத்தித்துறை மெத்தைக் கடைச் சந்தியில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு:
பிரகாஷ் எலெக்ரோனிக்
பஸ் நிலையம், பருத்தித்துறை.
(6340) T.P: 070 - 213060


## தீப பூஜை

இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் திருக்கோயிலில் இன்று (24.07.2002) புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு தீப பூஜை நடைபெறும். தொடர்ந்து 7.00 மணிக்கு அம்மாள் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் திருக்கோவில். (C-23043) - விநாய அடியார்கள்.

# யாழ்.பல்கலைக்கழக அணிக்கு இங்கிலாந்து மண்ணில் வெற்றி

இங்கிலாந்தின் நியூடவுன் கிரிக்கெட் கழகத்துடனான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டியொன்றில் யாழ் பல்கலைக்கழக அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

அண்மையில் மிட்வேல்ஸ் நகரில் இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 48 ஓவர்களில் 207 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது அவ்வணி.

உள்ளூர் போட்டிகள் பலவற்றில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடியுள்ள சசிகரன், மிட்வேல்ஸிலும் தனது திறமையைப் பறைசாற்றினார். அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 59 ஓட்டங்களைப் பெற்றார் அவர். கௌரிபாகன் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூடவுன் கழக பந்து வீச்சாளர்களில் ரொப் பிர்ச் 29 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூடவுன் அணி 202 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. எம்.ஜோன்ஸ் 67 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ்பல்கலைக்கழக பந்து வீச்சாளர்களில் சிறி, விமல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். உள்ளூரில் கயிற்றுப்பாய் ஆடுகளத்தில் மாத்திரம் போட்டிகளில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக அணி, முதல் தடவையாக இங்கிலாந்தில் புற்றரை ஆடுகளத்தில் விளையாடி இவ் வெற்றியை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லண்டனில் நடைபெறும் ஏழாவது தமிழ் விளையாட்டு விழாவின் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்பல்கலைக்கழக கிரிக்கெட் அணி அங்கு சென்றிருப்பது தெரிந்ததே. (ஐ)

# அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசகர் கொண்டொலீஸா றைஸ் ஆகியோரையும் சந்தித்துப் பேசுகிறார்.

இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்க விசேட படைகள் பயிற்சி அளிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் தமது பேச்சுக்களின்போது கேட்டுக்கொள்வார். இப்போதே இலங்கைக்கு அமெரிக்க இராணுவ உதவி வழங்கிவருகிறது.

இதுதவிர, அமெரிக்காவின் இலங்கைக்குச் சாதகமான வர்த்தக நிலைமையை ஏற்படுத்தித் தருமாறும் பிரதமர் ரணில் அமெரிக்கத் தலைவர்களைக் கேட்டுக்கொள்வார். (ஐ)

## புஷ்- ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் பாரியாருமான கிளாரி கிளின்டனுடன் பிரதமர் ரணில் நாளை விசேட சந்திப்பு ஒன்றில் கலந்துகொள்வார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை பிரதமர் அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய செயற்பாடுகளுக்கான மேலதிக செயலர் கிறிஸ்டினாரொக்காவைச் சந்தித்துப் பேசினார்.

வாஷிங்டன் ரைம்ஸ், பொஸ்டன் குளோப், நியூயோர்க் ரைம்ஸ் ஆகிய பத்திரிகைகளுக்கு பிரதமர் விசேட செவ்வி வழங்கினார். (ஐ-9)

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23 ஆம் திகதி கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு, தமிழர்களின் பெருமளவு உடைமைகள், சொத்துக்கள் நாசமாக்கப்பட்ட சம்பவங்களை நினைவுகூர்ந்தே கறுப்பு ஜூலை அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. (ஐ)

# தமிழருக்கு சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா, புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து புலிகள் அமெரிக்காவில் உள்ள தமிழ் மக்களிடம் பணம் பிடுங்கி இலங்கைக்குக் கொண்டு வருவதை நிறுத்திவைத்ததுதான்.

அமெரிக்காவைப் போல பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று தடைசெய்தன.

அதனால் புலிகளுக்குப் பணத்தட்டுபாடு ஏற்பட்டுவிட்டது. சர்வதேச சமூகம் பயங்கரவாதத்தை வன்மையாக எதிர்க்க ஆரம்பித்துவிட்டது. நிலைமை தமக்குச் சாதகமாக இல்லை என்று கண்டதும் வேறு வழி இல்லாமல் புலிகள் சமாதானம் பேச வந்திருக்கிறார்கள்.

அவர்களே யுத்தநிறுத்தத்தை முதலில் ஒருதலைப்பட்சமாகப் பிரகடனம் செய்தார்கள்.

எல்லாப் பிரிவினைவாதப் போராளிக குழுக்கள் மற்றும் தீவிரவாதச் சமய அமைப்புகள் போலப் புலிகளும் பயங்கரவாதத்தை ஆயுதமாகப் பாவித்துக் கொண்டு தாம் இந்துச் சிறுபான்மை மக்களின் உரிமைக்காகச் சட்டபூர்வமாகப் போராடுவதாகக் கூறிக்கொண்டார்கள். தங்களை எதிர்த்த தமிழர்களைப் புலிகள் கொன்றார்கள். சிங்களவர்களையும் படுகொலை செய்தார்கள்.

மொழி, பொருளாதார அபிவிருத்தி, சமய விவகாரங்கள் முதலானவற்றில் ஒன்றரைக்கோடி சிங்களவர்கள் 30 லட்சம் தமிழர்களுக்குப் பாரபட்சம் காட்டி அவர்களை ஒதுக்கிவருவதாகப் புலிகள் கூறினார்கள்.

ஆனால், அவர்கள் நடத்திய பயங்கரவாதப் படுகொலைகளால் அவர்கள் கூறியது எடுபடவில்லை.

புலிகள் இலங்கையில் ஜனாதிபதி பிரேமதாஸாவை 1993 இல் படுகொலை செய்தார்கள். இந்தியாவில் பிரதமர் ராஜீவ்காந்தியை 1991 இல் கொன்றார்கள்.

இப்போது யுத்தநிறுத்தத்தை ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்புக்குழு கண்காணித்துவருகிறது.

பேச்சுக்கள் கடந்த மே மாதம் நடைபெற இருந்தது. அது இப்போது ஓகஸ்ட் மாதத்துக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 160 நாள்களுக்குள் - அதாவது ஓகஸ்ட் 2 இற்குள் - ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை விடயங்களையும் அரசு நிறைவேற்ற வேண்டும் என்று புலிகள் கேட்கிறார்கள்.

புலிகள் தமது பிரிவினைப் போராட்டத்தை 1983 இல் ஆரம்பித்தார்கள். வடக்கு - கிழக்கைத் தனிநாடாக்குவதற்கான போராட்டம் அது.

ஆரம்பத்தில் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் புலிகளுக்கு உதவினார்கள். பின்னர் 1988இல் இந்திய அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பியதும் புலிகள் அந்தப் படையையும் எதிர்த்துப் போராடினார்கள்.

எத்தனையோ இலங்கைத் தலைவர்கள் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஆயினும் புலிகள் கார்க்குண்டுவெடிப்புகளை நடத்தியதாலும் சிங்களவர்களைக் கொன்றதாலும் அந்தச் சமாதானமுயற்சிகள் ஒப்பேறவில்லை. புலிகள் தாம் போக்கைதிகளாகப் பிடித்துக்கொண்ட இலங்கைப் படையினரையும் கொன்றுகுவித்ததால் நிலைமை மோசமாகியது.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இலங்கைப் படையினரால் பிடிக்கப்பட்டால் தங்கள் கழுத்துகளில் தொங்கும் சயனைட் வில்லைகளைச் சப்பித் தற்கொலை செய்துகொள்வார்கள்.

புலிகள் 13 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைக் கூடத் தமது படையில் சேர்த்துக்கொள்கிறார்கள்.

நான் பிரபாகரனைச் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறேன். இன்று புலிகளுக்கு உள்ள ஒரே சவால், அது அரசியல் இயக்கமாக மாறவேண்டியது தான்.

ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்த இருக்கிறோம். தமிழ்மக்களுக்கு அவர்களின் பிராந்தியத்தில் சமூக, பொருளாதார, கலாசார விடயங்களில் அதிகாரத்தைப் பரவலாக்க உள்ளோம்.

எப்படியிருந்தாலும் எல்லாப் பிராந்தியங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். நீதித்துறை சம்பந்தப்பட்டமட்டில் மேன்முறையீடுகள் கொழும்பு உயர்நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படும் - என்றார் பிரதமர். (ஐ-9)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

☆ யூத் ☆

☆ ஏய் நீ ரொம்ப அழகா இருக்கிறாய் பிரதிகள் உடன் பெறலாம்.

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(C/23041)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிதம்பரி சின்னத்தங்கம்

அல்லாரை வடக்கைச் சேர்ந்த திருமதி சிதம்பரி சின்னத்தங்கம் அவர்கள் நேற்று (23.07.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னன் சிதம்பரியின் அன்பு மனைவியும், இராசு, மணியம், காலஞ்சென்றவர்களான கந்தையா, இரத்தினம் ஆகியோரின் சகோதரரும், செல்வராசா(இராசன்), சதாசிவம்(துரை), கண்ணாம்பாள், தருமலிங்கம், சுபத்திராதேவி, புஸ்பராசம் காலஞ்சென்ற சின்னாச்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2002) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*அல்லாரை வடக்கு,*
*கொடிகாமம்.* (C-2044)

தகவல்:
பிள்ளைகள்

## அமிர்தலிங்கம் துரைசிங்கம்

(எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழ் முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகரும் சைவநெறி வித்தகருமாகிய அமிர்தலிங்கம் துரைசிங்கம் கடந்த (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் நடராஜலிங்கம் (அதிபர்-யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்), சிவயோகலிங்கம் (யாழ்.-அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம்), சித்திவிநாயகலிங்கம் (பொறியியலாளர்-அபுதாபி), திருக்குமரலிங்கம் (திறைசேரி-கொழும்பு), கிருஸ்ணானந்தலிங்கம் (நிர்வாக உத்தியோகத்தர்-மன்னார் பிரதேச செயலகம்), அருட்சோதிலிங்கம் (கனடா), சுபத்திராதேவி, கெங்காதேவி, நவமணிதேவி (உபஅஞ்சல் அதிபர்-எழுதுமட்டுவாழ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகநாயகி, பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அஞ்சல்அதிபர்-மருதடி), ராகினி (அபுதாபி), இராசகுமாரி (படவரைஞர்-கொழும்பு), ரஞ்சினிதேவி (உதவிக் கணக்காளர்-தேசிய வீடமைப்பு அதிகாரசபை, மன்னார்), சுமதி (ஆசிரியை-கனடா), காலஞ்சென்ற அசோக்குமார் (அரச ஒப்பந்தகாரர்) மற்றும் தங்கராசா (இலங்கை வங்கி-நெல்லியடி), சிவானந்தம் (எழுதுமட்டுவாழ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிகதரன் (கணனிப் பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), கவிதா (ஆஸ்திரேலியா), வித்தியா (லண்டன்), கிரிஜா (கொழும்பு), நர்மதா, மதுசூதனன், கீர்த்தனா, யஸ்மினா, தனுஷன், நிருசன், அர்ச்சனா, அபிஷேக், துலாஞ்சலி, சுபாஞ்சலி, கீதாஞ்சலி, தீபாஞ்சலி, பிரஷாந், டிலக்ஷனா, தர்மிகன், காலஞ்சென்ற மதிமுகன் மற்றும் சாம்பகி, நிருஷா, சாருகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆகாஷ் அவர்களின் அருமைப் பூட்டனும் தம்பிராசா, நடராசா, இரத்தினசபாபதி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2002) புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பிரதான வீதி, (இ.போ.ச. டிப்போ அருகில்),*
*பருத்தித்துறை.* (6329)

தகவல்:
து.நடராஜலிங்கம்
(மகன்)

# ஈராண்டு நிறைவில்



இங்கிதமாய்ப் பேசி எமை ஈன்றெடுத்து ஆளாக்கி
இவ்வுலகில் ஏற்றமுடன் வாழவைத்த தெய்வமே!
உங்களுடன் பழகிய நாள்கள் உள்ளத்திலே
நிதர்சனமாய் உறைந்து நிதமெம்மை
உணர்த்தி நிற்கின்றனவே!
பங்கயத்திலமர்ந்த பார்வதி பரமேஸ்வரன் கழலினையில்
சந்ததமும் நீரிருந்து சங்கரன் தாள் பணிந்திடவே
எங்கள் பிரார்த்தனைகள் இரண்டாண்டுகள் நிறைவில்
இதயத்தில் உறைந்து நிதம் இரை மீட்கின்றனவே!
- குடும்பத்தினர் -

தோற்றம் 26.06.1941 மறைவு 14.08.2000

அமரர்

## தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி)


CHEMISTRY CENTER
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
இணைந்த கணிதம்
A/L 2004
இருபடிச் சமன்பாடு
சார்பு (Function)
Sat.& Sun. 4.30 - 6.30
ஆரம்பம்: 27.07.2002
A/L 2003
தொகையீடு
ஆரம்பம்: Fri. 3.45 - 445 (New Time)
செந்தில்நாதன் B.Sc.

கணக்கீடு
A/L 2003
பங்குடைமை நாளை 4.30 p.m.
A/L 2004
தனிவியாபார முடிவுக் கணக்கு
நாளை 3.30 p.m.
S.தவா
B.Com. (Hons) Acc.Spl.
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
(6338)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
☆ ஏய் நீ ரொம்ப அழகா இருக்கிறாய்
ஒரிஜினல் CD
☆ யூத்
CD கள் உடன் பெறலாம்
அல்டி எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.
(C/23042)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.